

## அயலகத் தமிழர் நல வாரியம்: ஒரு செயல்பாட்டு அறிக்கை

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் **அயலகத் தமிழர் நல வாரியம்** அமைக்கப்பட்டது. இந்த வாரியம், புலம்பெயர் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட செயல்பாடுகள் வாரியத்தின் முக்கிய முன்னெடுப்புகளாகும்:

## வாரியத்தின் தொடக்கம் மற்றும் முக்கிய சந்திப்புகள்

**ABSTRACT**

Rehabilitation – Establishment of the Tamil Nadu Non-Resident Tamils Welfare Board for the welfare of Non-Resident Tamils in India and Abroad – Nomination of Chairperson and Members – Notification – Issued.

**PUBLIC(REHABILITATION.II(2)) DEPARTMENT**

**G.O.(Ms).No.827** **Dated.24 .12.2022**
சுப கிருது, மார்கழி–9
திருவள்ளுவர் ஆண்டு 2053

Read:

1. Tamil Nadu Government's Press Release No.842, dated 06.10.2021.
2. From the Commissioner, Commissionerate of Rehabilitation and welfare of Non-Resident Tamils, letter No.E1/7171/2018, dated 25.10.2021 and 12.11.2021.
3. Tamil Nadu Non-Resident Tamils' Welfare (Amendment) Act, 2022 (Tamil Nadu Act No.22 of 2022).

*****

**ORDER:-**

As per the Press Release of the Tamil Nadu Government, the Tamil Nadu Non-Resident Tamils' Welfare (Amendment) Act, 2022 had been passed and notified in the Tamil Nadu Government Gazette on 25.04.2022 for the Constitution of the Establishment of the Tamil Nadu Non-Resident Tamils' Welfare Board for the welfare of Non-Resident Tamils' in India and Abroad. The Government have decided to nominate the following persons as the Chairman and Members of the Tamil Nadu Non-Resident Tamils' Welfare Board and issue orders accordingly:-

| S.No. | Names | Designation |
|---|---|---|
| 1. | Thiru. Karthikeya Sivasenapathi | Chairman |

(P.T.O.)





கலைஞர் ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் இயற்றப்பட்ட 'வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டத்தின்' தொடர்ச்சியாக, ஆட்சி மாற்றத்தால் முன்னெடுக்கப்படாமல் இருந்த 'அயலகத் தமிழர் நல வாரியம்' 2022 ஆம் ஆண்டு டிசம்பரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டு, திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.










கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதி நடைபெற்ற **'சிந்தனைக்களம்'** நேரலை நிகழ்வில், அயலகத் தமிழர் நல வாரியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது.

அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற திரு. கார்த்திகேய சிவசேனாபதி, தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி மஸ்தான் அவர்களைச் சந்தித்தார்.





புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கார்த்திகேய சிவசேனாபதி, மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் கழகத் தலைவர் தளபதி அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். இந்தச் சந்திப்பு, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதில் தமிழக அரசு காட்டும் அக்கறையையும், புதிய வாரியத்தின் செயல்பாடுகள் குறித்த எதிர்பார்ப்புகளையும் உறுதிப்படுத்தியது.



# Board moots financial body for Non-Resident Tamils to invest money

'Until the institution is established, the Board will recommend that interested persons, as guided by the Chief Minister, invest in other State agencies like the transport corporations'

**Dennis S. Jesudasan**
CHENNAI

The Non-Resident Tamils' Welfare Board, constituted by the Tamil Nadu government, is exploring the possibility of establishing a financial institution in which Tamils working abroad can invest their savings. It is exploring the idea with the guidance of Chief Minister M.K. Stalin.

One of the challenges facing several thousands of Tamils living abroad is to find a reliable and trustworthy way of investing their life savings in Tamil Nadu. "If the financial institution is set up by the State government, it will be beneficial to those interested in investing their savings," Board chairperson Karthikeya Sivasenapathy told *The Hindu*.

Until the institution is established, the Board will recommend that such interested persons, as guided by the Chief Minister, invest in other State agencies like the transport corporations. The Board chairperson, members and commissioner are set to visit Kerala's NORKA-ROOTS to learn how it works.

Another issue facing the Tamils living abroad is complaints about tenants not vacating their real estate properties and it is challenging for them to deal with them while living abroad. "We are holding talks with police officers to deal with such complaints," he said.

The Board is also planning to establish a mobile museum that could be used, on special occasions, in the international fora, depicting the greatness of the Tamil civilization, Tiruvalluvar and the archaeological findings from Keeladi, Adichanallur and others sites, Mr. Sivasenapathy said. The Board will discuss its proposals at a meeting on February 28.

> We are holding talks with police officers to deal with complaints from Tamils living abroad about tenants not vacating their properties
>
> KARTHIKEYA SIVASENAPATHY
> Chairperson, Non-Resident Tamils' Welfare Board





அயலக தமிழர் நல வாரியத்தின் நிர்வாக அலுவலராக ஓய்வு பெற்ற அரசு அதிகாரி திரு. சங்கரலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு தனது முதல் நாள் பணியைத் தொடங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உயர்ந்த நோக்கத்துடன் வெளிநாடுகளில் வாழக்கூடிய தமிழர்களின் நலன் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்க இந்த வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய அலுவலகம் மற்றும் நிர்வாக அலுவலர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்ச்சி சென்னை கடற்கரை சாலை எழிலகத்தில் நடைபெற்றது.





**விழிப்புணர்வு நிகழ்வுகள் :**

கோவை டாக்டர் என். ஜி. பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக மாணவர்களுக்கு வெளிநாடுகளில், ஐக்கிய நாட்டு சபையில் உள்ள வேலைவாய்ப்புகள், தமிழ்நாடு கடந்த ஐம்பது ஆண்டுகளில் பள்ளிக்கல்வி, உயர் கல்வியில் அடைந்த முன்னேற்றம், அதிக தொழில் முனைவோர்கள் உருவானது ஆகியவை குறித்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்களிடையே உரையாடப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியத்தின் நோக்கங்களையும், செயல்பாடுகளையும் கல்லூரி மாணவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.



ஈரோட்டில் செயல்படும் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக மாணவர்களுக்கு வெளிநாடுகளில், ஐக்கிய நாட்டு சபையில் என்னென்ன வேலை வாய்ப்புகள் உள்ளன, தமிழ்நாடு ஐம்பதாண்டுகளில் பள்ளிக்கல்வி, உயர் கல்வியில் எவ்வாறு முன்னேறியுள்ளது, அதிக தொழில் முனைவோர்கள் உருவானது ஆகியவை குறித்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்களிடையே உரையாடப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியத்தின் நோக்கத்தையும், செயல்பாடுகளையும் கல்லூரி மாணவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.





ஈரோடு கோபி செட்டிபாளையத்தில் செயல்பட்டு வரும் PKR மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் அயலகத் தமிழர் நல வாரியம் பற்றி உரையாடப்பட்டது. அங்கு நடைபெற்ற மாணவர் சங்கப் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டு, மாணவிகளிடம் அரசியல் புரிதல் அவசியம், குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர் சூட்டுவதன் அவசியம், இயற்கையை எப்படி பாதுகாப்பது, புவியில் கார்பன் அளவைக் குறைப்பது, நெகிழி இல்லா உலகத்தை உருவாக்குவது, என்னென்ன புத்தகங்கள் படிக்க வேண்டும் போன்ற பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாடப்பட்டது. சின்ன கிராமங்களில் இருந்து வந்திருக்கும் மாணவர்களிடம், இதே போல உலகம் முழுவதும் தமிழர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து சென்று உயர் பொறுப்புகளிலும், பதவிகளிலும் இருப்பதற்குக் காரணம் 50 ஆண்டு கால திராவிட ஆட்சியில் ஏற்பட்ட கல்விப் பரவலாக்கம் என்பதை எடுத்துரைக்கப்பட்டது.





அமெரிக்காவின் கரோலினா தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து அமெரிக்காவில் வாழும் தமிழ் உறவுகளிடம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உருவான அயலகத் தமிழர் நல வாரியத்தின் அவசியத்தையும், அதன் செயல்பாடுகளையும் எடுத்துரைக்கப்பட்டு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி (டிரில்லியன் டாலர் கனவு) குறித்த கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.







கேரொலைனா தமிழ்ச் சங்கம்
Tamil Sangam of Carolina.Inc
திரைகடலோடியும் திரவியம் தேடு
சிறப்புரை:
திரு. கார்த்திகேய சிவசேனாபதி,
அயலக வாழ் தமிழர் நல வாரியத் தலைவர்
July 17, 2023
6:00PM
Herbert C. Young Community Center
101 Wilkinson Ave, Cary, NC 27513
சங்க உறுப்பினர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி!
உறுப்பினர் அல்லாதவர்கள் சங்கத்தில் சேர்ந்து நிகழ்ச்சிகளை கண்டு பயனடையவும்!
சிற்றுண்டி வழங்கப்படும்!
திரு கார்த்திகேய சிவசேனாபதி ஒரு இயற்கை ஆர்வலர். அழிந்து வரும் பாரம்பரிய காங்கேயம் காளைகளை காக்கும் பொருட்டு, சொந்தமாக காங்கேயம் கால்நடைகள் ஆராய்ச்சி நிலையம் நடத்தி வருகிறார். ஜல்லிக்கட்டு போராட்டத்தில் முதன்மை பங்கு பெற்றவர். தற்போது திமுக கட்சியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணியின் தலைவராக இருக்கிறார். அது தவிர புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தின் தலைவராக இருக்கிறார்.






தமிழ்ச் சங்கம்
m of Carolina



அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா மாகாணத்தில் நடைபெற்ற அற்புதமான நிகழ்வில் 'வீரத் தமிழ்' என்ற தலைப்பில் வாரிய தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி அவர்களால் உரையாடப்பட்டது. திட்டக் குழு துணைத் தலைவர் முனைவர் ஜெயரஞ்சன் அவர்கள் 'செல்வத்தமிழ்' என்ற தலைப்பிலும், பொருளாதாரம் பற்றியும், பத்திரிகையாளர் திரு. செந்தில்வேல் அவர்கள் 'கல்வித்தமிழ்' என்ற தலைப்பிலும் உரையாற்றினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து அங்கு வசிக்கும் தமிழ் மக்களிடம் பலதரப்பட்ட கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டது பெரும் மகிழ்ச்சியை அளித்தது.










தினத் தந்தி

DAILY THANTHI

## அயலக தமிழர் நல வாரிய வளைகுடா உறுப்பினர் தியாகத்திருநாள் வாழ்த்து

துபாயில் அயலக தமிழர் நல வாரிய வளைகுடா உறுப்பினரும், அமீரக தி.மு.க அமைப்பாளருமான எஸ்.எஸ். மீரான் வெளியிட்டுள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது,

தியாகத்திருநாளில் சாந்தியும், சமாதானமும் மேலோங்கிட உழைப்போம்.

மனித உறவுகள் உன்னதம் பெற்றிட அன்பை விதைப்போம்.

இந்த நன்னாளில் இரக்கம், சகோதரத்துவம், நல்லிணக்கம் மற்றும் தியாக உணர்வு மேலும் பெருகட்டும்.

மனிதநேயத்தோடு பாகுபாடின்றி கசப்புணர்வை மறந்து ஒன்றிணைந்து வாழ்வோம்.

அமீரக வாழ் தமிழ் சொந்தங்கள், இன்று சிறப்புடன் பண்டிகையை கொண்டாடும் எனது அன்பு சகோதர, சகோதரிகள் அனைவருக்கும்

இன்று போல என்றும் சகோதரத்துவமும், மனித நேயமும், அமைதியான வாழ்வும் நிலவ பிரார்த்தனை செய்து எனது இனிய தியாகத்திருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

எஸ்.எஸ் மீரான்

S.S. மீரான் உறுப்பினர் - தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரியம் அமைப்பாளர் - அமீரக திமுக



## முக்கிய கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

அயலகத் தமிழர் நல வாரியத்தின் இரண்டாம் கூட்டம் சென்னை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த திரு. ராம், அரபிய அமீரகத்தைச் சேர்ந்த திரு. மீரான், மும்பையைச் சேர்ந்த திரு. மீரன், லண்டனிலிருந்து திரு. முகமது பைசல், சென்னையைச் சேர்ந்த திரு. புகழ் காந்தி, மொரிசியஸ் நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரும், அயலகத் தமிழர் நல வாரியக் குழு உறுப்பினர் திரு. ஆறுமுகம் பரசுராம், அமெரிக்காவிலிருந்து திரு. கால்டுவெல் நம்பி, தலைவர் & நிர்வாக இயக்குநர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் டாக்டர். சி. நா. மகேஸ்வரன் இ.ஆ.ப., ஆணையர் திருமதி. ஜெசிந்தா இ.ஆ.ப., தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரக துணை இயக்குநர் திரு. ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





சென்னை அயலக தமிழர் நல வாரியத்தின் ஆணையர் அலுவலகத்தில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள் தலைமையில், வாரிய தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி, பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் திரு. கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ், துணை இயக்குநர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை திரு. ரமேஷ், உறுப்பினர்கள் திரு. கால்டுவெல் வேல்நம்பி, திரு. புகழ் காந்தி ஆகியோர் தமிழர் அயலக தமிழர் தின நாளுக்கான கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் ஜனவரி 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் சென்னையில் உலக வாழ் தமிழர்கள் ஒன்று சேரும் நிகழ்வு பற்றியும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்கு பார்வையில் உருவாக்கப்பட்ட புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் நோக்கங்களையும் கலந்து ஆலோசித்து பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.









அமெரிக்க நாட்டின் டல்லாஸ் நகரத்தில் தமிழ்த் தொழில் முனைவோர் உறவுகளுடன் ஓர் இனிய சந்திப்பு நடைபெற்றது.



அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணம் அட்லாண்டா நகரத்தில் தமிழ்த் தொழில் முனைவோர்க்கான அமைப்பில், 50க்கும் மேற்பட்ட தொழில் முனைவோருடன் ஒரு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.





அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி, செனட்டர் ஷேக் ரஹ்மான், ரியாக்ஷன் டீம் தலைவர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர்ந்தோர் லாவண்யா அழகேசன், ஏ. ஸ்ரீகாந்த் கோடெபோயினா ஆகியோருடன் சந்திப்பு நடத்தினார்.




அமெரிக்காவின் ஜார்ஜியா மாநிலத்தில் அட்லாண்டா நகரத்தில் உள்ள இந்திய நாட்டின் தூதரகத்தில் பணிபுரியும் திருமதி. சுவாதி குல்கர்னி ஐ.எஃப்.எஸ். அவர்கள் இல்லத்திற்கு அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் என்ற முறையில் அழைக்கப்பட்டிருந்தார். அவரது இல்லத்தில் அமெரிக்கா வாழ் தமிழர்கள், ஜார்ஜியா மாநிலத்தின் செனட்டர் திரு. ரகுமான் ஆகியோரை சந்தித்த போது, புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தை அமைத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன.







அமெரிக்காவில் ஜூன் 28 முதல் ஜூலை 20 வரை நடைபெற்ற பயணம் பற்றிய ஒரு விரிவான அறிக்கை பகிரப்பட்டது. சாக்ரமெண்டோ, கலிபோர்னியாவில் நடைபெற்ற ஃபெட்னா (Federation of Tamil Sangams of North America) நிகழ்வில் உலகம் முழுவதும், குறிப்பாக அமெரிக்கச் சமூகத்தைச் சேர்ந்த தமிழர்களைச் சந்தித்த அனுபவம், நியூ ஜெர்சி, ஜார்ஜியா, அட்லாண்டா, டல்லாஸ், சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதி, வட கரோலினா போன்ற இடங்களில் நடந்த நிகழ்வுகள் மற்றும் சந்திப்புகள் இதில் குறிப்பிடப்பட்டன. தென்னசியில் குழந்தை விஸ்ருத் தொடர்பான குழந்தை காப்பக வழக்கில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு முயற்சியான அயலகத் தமிழர் நல வாரியம் புலம்பெயர்ந்தோர் சமூகத்தில் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கம் ஆகியவை இந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டன.

## தொலைபேசி உதவி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

இஸ்ரேல் பகுதியில் போர் தீவிரமடைவதால் இஸ்ரேல் வாழ் தமிழ் மக்கள் தங்களின் பாதுகாப்பு மற்றும் உதவிக்கு அயலகத் தமிழர் நலவாரியத்தை கீழ்க்கண்ட தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொண்டு உதவிகள் பெறலாம் என அறிவிக்கப்பட்டது:

தொலைபேசி எண்கள்: 87602 48625, 9940256444, 9600023645

மின்னஞ்சல்: nrtchennai@tn.gov.in, nrtchennai@gmail.com








புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தின் சார்பாக வெளிநாட்டில் வாழக்கூடிய தமிழர்கள் தங்களுடைய எண்ணங்கள், பிரச்சனைகள், தேவைகள், சந்தேகங்களை கேட்டுக் கொள்வதற்காக ஒரு 24 மணி நேர தொலைபேசி/அலைபேசி இணைப்பு உருவாக்கப்பட்டு அதற்காக ஒரு சில அலுவலர்களும் அமர்த்தப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிட்டு அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வாரியத் தலைவர், கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணைப் பயன்படுத்தி வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்புக்கு: +91 (0) 8069009901 இந்தியா: 1800 309 3793 | Missed Call: 8069009900







இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனையின்படி

மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்கள் போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்பு !

அயலக தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதம்!

திருப்பூர், அக்.19- உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடு பட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.





# இஸ்ரேல் நாட்டில் சிக்கி தவிக்கும் தமிழர்களை காக்க நடவடிக்கை

## அயலக தமிழர் நலவாரிய தலைவர் தகவல்

வெள்ளக்கோவில், அக்.17: இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்து வரும் தமிழர்களை பாதுகாக்க தமிழ்நாடு அயலக தமிழர் நல வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்தார்.

இது குறித்து அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி கூறியதாவது: இஸ்ரேல் பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கித் தவிக்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி அங்குள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள் வெளியிட்டு அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட்கும் பணியை செய்து வருகிறோம். மேலும் கைபேசி புலனக் குழு (வாட்சப் குழுக்கள்) அமைக்கப்பட்டு அங்குள்ள தமிழர்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம்புத்தூர், திருவாரூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அரசின் 'ஆபரேஷன் அஜய்' திட்டம் மூலம் முதற்கட்டமாக இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமானத்தில் புது டெல்லி வந்தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் அயலக நலத்துறை சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற்பாடு தரப்பட்டது.

மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 7 நபர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர். சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 14 தமிழர்களையும், தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு செல்ல வாகன வசதி ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கப்பட்டது. கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். உலகத்தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனைப்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# அயலகத் தமிழர் நல வாரியம்

குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டிடத்தில், (12.06.2024) அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்து காரணமாக, சுமார் 49 நபர்கள் உயிரிழந்திருப்பதாக தகவல் வரப்பெற்றுள்ளது. அவர்களுள் எவரேனும் தமிழர் உள்ளனரா என்ற தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது. தீ விபத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் மற்றும் விபத்தில் காயமடைந்தவர்கள் குவைத் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விபத்தில் தமிழர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்தம் விவரங்களைப் பெற்று, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க அயலகத் தமிழர் நலத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம், குவைத் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் மற்றும் அங்குள்ள தமிழ் அமைப்புகளைத் தொடர்பு கொண்டு விபத்தில் சிக்கிய தமிழர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

**இவ்விபத்து தொடர்பான விவரங்களுக்கு அயலகத் தமிழர் நலத்துறையின் கீழ்க்காணும் உதவி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**இந்தியாவிற்குள்- +91 1800 309 3793**

**வெளிநாடு - +9180 6900 9900, +91 80 6900 9901**











## தமிழர் தினக் கொண்டாட்டங்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம் என்பது வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின், குறிப்பாக இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் நலன் மற்றும் நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இது சட்ட, கலாச்சார மற்றும் சமூக ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஆதரவையும் உதவியையும் செய்து வருகிறது. மூன்றாவது முறையாக உலகத்தமிழர் ஒன்று கூடக் கூடிய ஒரு மாபெரும் நிகழ்வான **வெளிநாடு வாழ் தமிழர்கள் தினம்** சென்னையில் ஜனவரி 12, 13 (மார்கழி 27, 28) அன்று கொண்டாடப்படவுள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ் சமூகத்திற்கு பங்களிப்புகள் மற்றும் சாதனைகளை சிறப்பிப்பதற்கும் அங்கீகரிக்கவும் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கொண்டாடப்படும் இந்த நிகழ்வு, தமிழர் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபுகளை வெளிப்படுத்தும் ஒரு களமாக செயல்படுகிறது. இந்த விழாவில் பொதுவாக கலாச்சார நிகழ்ச்சிகள், கலை, இலக்கியம், பகுத்தறிவு, பொருளாதாரம், வரலாறு ஆகிய கலந்துரையாடல்கள் மற்றும் உலகளாவிய தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்து அவர்களின் அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டாடும் நிகழ்வுகளை உள்ளடக்கியது. நிகழ்விற்கான பதிவுக்கு இணைப்பு: https://nrtamils.tn.gov.in/en/nrt-day/nrt-2024/




இன்று (28.02.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டிற்கு வெளியேயும், அயல் நாடுகளில் வேலை, கல்வி, வியாபாரம், வணிகம் நிமித்தமாக சென்று வசிக்கும் அயலகத் தமிழர்களின் நலன்கள் தொடர்பாக திட்டமிடவும், புதிய நலத்திட்டங்களை செயல்படுத்திடவும் அமைக்கப்பட்ட "அயலகத் தமிழர் நல வாரியத்தின்" முதல் கூட்டம் வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வாரியத்தின் அனைத்து உறுப்பினர்கள், இயக்குநர், தமிழ் இணையக்கல்வி கழகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் (வெளிநாடு வாழ் தமிழர் பிரிவு) ஆகியோரும் கலந்துகொண்டனர்.









# TN cops launch app for NRIs to lodge complaints

A.Selvaraj@timesgroup.com

**Chennai:** Addressing a long-pending demand of non-resident Indians (NRIs), the Tamil Nadu police have developed an application (App) enabling them to lodge complaints and track its status stage by stage. The NRI cell will function from out of the DGP office in Chennai.

Chief Minister M K Stalin first announced the formation of an exclusive NRI cell in the assembly on September 13, 2021. The unit was formally inaugurated on April 4, 2022.

Reports can be generated, date-wise, country-wise, category-wise, and stage-wise using this desktop application. The link to the application will be available in the Tamil Nadu police website https://eservices.tnpolice.gov.in/

**At each stage, the petitioner will receive a notification regarding the status of the petition through email. He can also track his petition by logging in to the app using the unique ID**

The application user guide is uploaded to the Tamil Nadu police YouTube channel @TNPOLICEOFFICIAL. In case of any queries relating to lodging of the complaint, people can contact the NRI Cell on 044-28470025.

Though NRIs were always able to send in their complaints by e-mail, a separate app will make registration of complaints hassle-free, and enable them to receive notifications relating to progress of inquiry from police.

The desk top app will be available on the official website of Tamil Nadu police from August 4, 2023.

Once a grievance is lodged in the App, a unique grievance identity (ID) is created for the petitioner. It will be first received by NRI cell and forwarded to the city or district concerned for inquiry after verification.

After inquiries, the report, along with supporting documents received from the city/district, will be further scrutinised by officers of the NRI Cell.

At each stage, the petitioner will receive a notification regarding the status of the petition through email. He can also track his petition by logging in to the app using the unique ID.



கனடா நாட்டின் டொரன்டோவில் கனடிய தமிழ் காங்கிரஸ் என்ற அமைப்பு வருடா வருடம் நடத்தக்கூடிய தமிழர் திருவிழாவில் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் தமிழர்கள் ஒன்று கூடுகிறார்கள். மதம், அரசியல் போன்ற எந்தவித கோட்பாட்டுக்குள்ளும் இல்லாமல் தமிழர்களாக ஒன்றுகூடும் ஒரு மிகப்பெரிய விழா இது. இந்த விழாவில் கலந்து கொண்டு அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக, தமிழ்நாடு அரசின் சார்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அயலகத் தமிழர் வாரியத்தை உயர்ந்த நோக்கத்துடன் உருவாக்கி இருக்கிறார் என்பதைப் பற்றியும், தொப்புள் கொடி உறவுகளான தமிழீழத்திலிருந்து கனடாவில் புலம்பெயர்ந்து வாழக்கூடிய சகோதரர்களுடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டது மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.







இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு. மனோ கணேசன் அவர்கள் மற்றும் டொரன்டோ மேயர் திருமிகு. ஒலிவியா சோ, துணை மேயர், பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஷௌ சென், திரு. கிரஹாம் மெக்ரிகோர் (பாராளுமன்ற உறுப்பினர், பிராம்டன் வடக்கு), திரு. ஜோசுவா மாரிம்பில்லி, திரு. லோகன் கணபதி (பாராளுமன்ற உறுப்பினர், மார்க்கம்), திருமதி. மல்லிகா வில்சன் (துணை அட்டர்னி ஜெனரல், ஒன்டாரியோ ப்ரோவின்சியல்), திரு. சங்கர் நல்லதம்பி, திரு. நவ தில்சன், திரு. திருகுமரன், திரு. சாம் அசோகன், திரு. டேவிட் பூபாலபிள்ளை, திரு. சிவா இளங்கோ மற்றும் போன்ற பல்வேறு அரசியல் கட்சியை சேர்ந்த தலைவர்கள் இந்த நிகழ்வில் பங்கு பெற்றது மிகப்பெரிய மகிழ்ச்சியை அளிப்பதாகவும், தமிழர்களாக ஒன்றுகூடி மொழி, கலாச்சாரம், கல்வி, சுற்றுச்சூழல், பொருளாதாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும், அடுத்த 150 வருடங்களுக்கு இந்த தலைமுறை சிந்திக்க வேண்டும் என்பதைப் பற்றியும் எடுத்துரைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் என்ற முறையில் அழைத்ததற்கு கனடிய தமிழ் காங்கிரசிற்கு மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.





வணிகத்திலும், கல்வியிலும், பொருளாதாரத்திலும் நாம் வளர வளர நம்முடைய மொழிக்கும் நம் இனத்திற்கும் மரியாதை கூடும் என்பதற்கு மேலும் ஒரு உதாரணம் கனடாவில் நடைபெற்ற தமிழர்களுடைய திருவிழா. கனடா நாட்டுத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்பாட்டுத் திருவிழாவில் ஜப்பான் நாட்டு மகிழுந்து நிறுவனமான ‘டொயோட்டா‘ நிறுவனம் அந்த விழாவில் டொயோட்டா வாகனத்தை வாங்கினால் அதற்கான தள்ளுபடி கிடைக்கும் என்பதை தெரிவித்துள்ளார்கள். இதற்காகத்தான் நாம் பொருளாதார ரீதியாக நாம் வளர்ந்து நமது மொழியையும் இனத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



## தமிழர் நலன் சார்ந்த முன்னெடுப்புகள்

புலம்பெயர்ந்த தமிழர் அமெரிக்காவில் அட்லாண்டா நகரத்தில் பல வருடங்களாக தமிழ் மொழிக்காக பல்வேறு சாதனைகளைப் புரிந்து தமிழ் மொழியை ஜார்ஜியா மாநிலத்தின் மாநில மொழியாக அந்தஸ்து பெற செய்த தமிழ் பள்ளிக்கூடத்தின் தலைவர் திரு. ரவி பழனியப்பன் அவர்கள் இத்தாலி நாட்டுக்கு ஜனாதிபதியுடன் செல்வதற்கான அந்த கூட்டமைப்பிலே ஒரு குழுவினராகச் செல்வது மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அளிப்பதாகக் கூறப்பட்டு, அவருக்கு புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.







மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் முயற்சியாக, ஆதரவற்ற நிலையில் அமெரிக்காவில் பரிதவித்த குழந்தையை அமெரிக்காவில் சட்ட போராட்டத்தின் வழியாக மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அனுப்ப ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

14 • Dinakaran • Kovai • 29.3.2023

### அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் நடவடிக்கை

## அமெரிக்காவில் பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தையை மீட்க ஆய்வு



காங்கயம், மார்ச் 29: அமெரிக்காவில் மிசிசிப்பி மாகாணத்தில் தாய் தந்தையை இழந்த 2 வயது தமிழ்நாட்டை சேர்ந்த குழந்தையை உறவினர்களிடம் ஒப்படைக்கும் முயற்சியில் அயலகத் தமிழர் நலவாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் பெற்றோரை இழந்த பின் அண்டைவீட்டாரின் கட்டுப்பாட்டில் அந்தக் குழந்தை இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் அக்குழந்தையின் குடும்ப உறவினர்கள் அயலகத்தமிழர் நலவாரியத்தை அணுகி குழந்தையை இந்தியாவிற்கு அழைத்துவர உதவி கோரியுள்ளனர். இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக அக்குழந்தையை இந்தியாவிற்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த உத்தரவிட்டார்கள். முதலமைச்சரின் உத்தரவைத் தொடர்ந்து குழந்தையின் குடும்ப உறவினர்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் அயலகத் தமிழர்நல வாரியம் செய்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் தெற்கு பகுதியில் டென்னசி மாநிலத்தில் உள்ள மெல்பெசட் மாநகரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின் படியும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆலோசனைப்படியும் அயலகத் தமிழர்நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அட்லாண்டா இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் ராஜூ கந்தசாமி, மினிநாயர், அயலகத் தமிழர் நல வாரியத்தின் அமெரிக்கநாட்டு உறுப்பினர் கால்டுவெல் வேள்நம்பி, குழந்தையின் சித்தன்னை, பாட்டி, உள்ளூர் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் டல்லாஸ் நகரத்திலிருந்து சக்திவேல், சார்லோட் ரோகிணி, ராலேய குதி வடகிரோலினா REACTION (Response Emergency Access&Care To Indian Overeas Network Team Inc) லாவண்யா, மிட்சவுத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்தவாசுதேவன், கல்யாண், திருமகள் தியாகராஜன், ரேகாபிள்ளை, கேமெலியோஜோன்ஸ், பிரியா நாகராஜ், ராஜிவேல்ராஜன், கே.பிராமநாதன், விக்னேஸ்வரன் சிவசுப்ரமணியம், சூரியன் பொன்னுசாமி, செந்தில்விசந்திரன், சங்கர் மகாலிங்கம் சக்திவேல்ராம் கலந்துகொண்டனர்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது முன்னதாக நியூயார்க் வழக்கறிஞர்கள் நிலா மற்றும் பாலாஜி ஆகியோருடனும் இப்பிரச்சினையை சட்டப்படி எப்படி அணுகுவது என்று ஆலோசனை பெறப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைப்படி இந்திய வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து அக்குழந்தையை மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்துவரத் தேவையான சட்ட உதவி, பொருளாதார உதவி செய்வோம் என உறுதியளிக்கப்பட்டது. தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், வடஅமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை(FeTNA) தலைவர் பாலாசாமிநாதன் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பாகவும், அயலகத்தமிழர் நல வாரியம் சார்பாகவும் வாரியத்தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி நன்றிதெரிவித்தார்.





### இலக்கிய மற்றும் சமூக நிகழ்வுகள்

அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாகாணம் டாலஸில் வசிக்கக்கூடிய முனைவர் சித்ரா மகேஷ் அவர்கள் பல புத்தகங்களை எழுதி இருக்கிறார். தமிழ்ப் பள்ளி, டல்லாஸ் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் என பல்வேறு தமிழ் அமைப்புகளில் முக்கியப் பொறுப்புகளை வகித்து வருகிறார். இவர் உடுமலைப்பேட்டைக்கு அருகே தளி கிராமத்தைச் சேர்ந்தவர். அன்புச் சகோதரி திருமதி. சித்ரா மகேஷ் அவர்களின் நான்காவது புத்தகமான திருக்குறள் 3.0 வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியதில் மகிழ்ச்சி. 'தமிழ்க்காரி' என்று அறியப்படும் இவர் ஒரு விவசாயக் குடும்பத்தில் மூத்த மகளாகப் பிறந்தவர். உடுமலைப் பேட்டையில் ஆங்கிலப் பாடத்தில் இளங்கலைப் பட்டம் பெற்ற தமிழ்க்காரி, அதன் பின்னர் தமிழில் முதுகலைப் பட்டம் பயின்று, அதே பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். திருமணத்திற்குப் பிறகு அமெரிக்காவில் குடியேறியவர், அங்கே 1330 குறள்களையும் மனப்பாடமாகச் சொல்லி சாதனையாளராக இடம் பிடித்தார். குறும்படங்களுக்குப் பாடல்கள் இயற்றுவதிலும் தமிழில் கவிதைகள் எழுதுவதிலும் ஆர்வமுடைய தமிழ்க்காரி, 'என் செடி உன் பூக்கள்' என்ற கவிதைத் தொகுப்பையும், குறுந்தொகைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து எளிய விளக்கங்களுடன் 'பூக்கள் பூத்த தருணம்', என்ற நூலையும், கபிலரின் குறிஞ்சிப் பாட்டு நூலை எளிய கவிதைகளாக 'காதல் கதை சொல்லட்டுமா?' என்ற தலைப்புகளில் புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். சென்னையில் நடந்த திருக்குறள் 3.0 நூலின் வெளியீட்டு விழாவில், திரு. சுப. வீரபாண்டியன் நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். தமிழ் வளர்ச்சி மையத்தின் இயக்குநர் திரு. இரா. குறிஞ்சிவேந்தன், கவிஞர் மு. முருகேஷ் அவர்களுடன் வாழ்த்துரை வழங்கியது மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாறுகளைக் கொண்ட திருக்குறளுக்கு முழுவதுமாக உரை எழுதிய முதல் பெண்மணி என்கிற சாதனையை மூலம் தமிழ்க்காரி என்றழைக்கப்படும் சித்ரா மகேஷ் பெற்றுள்ளார். அவருடைய தமிழ் இலக்கியப் பணி சிறக்க வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.








## அமெரிக்காவில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் சந்திப்புகள்

அமெரிக்காவில் திரு. மனோகர் மற்றும் திருமதி. புவி மனோகர் இல்லத்தில் ஓர் இனிய சந்திப்பு நடைபெற்றது. திராவிட கருத்தியலைப் பற்றியும், தமிழ்நாடு நலன் சார்ந்த பல்வேறு முன்னெடுப்புகளைப் பற்றியும் மேற்கு வங்கத்திலிருந்து வந்திருந்த திரு. கார்கா சட்டர்ஜி மற்றும் 30க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுடன் உரையாடியது பெரும் மகிழ்ச்சியை அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டது. திரு. மனோகர் மற்றும் திருமதி. புவி மனோகர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.












அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் டல்லாஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடந்த நிகழ்வில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக வாரியத் தலைவருடன், நடிகரும் இயக்குநருமான திரு. சசிகுமார், இசையமைப்பாளர் திரு. ஜேம்ஸ் வசந்தன், திரு. ஆதவன் ஆகியோரும் கலந்து கொண்டது மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டது. தமிழர்கள் பற்றியும், தமிழர் பாரம்பரியம் பற்றியும் பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாடியது பெரும் மகிழ்ச்சியை அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டது.



அமெரிக்காவின் சாக்கரமெண்டோ நகரத்தில் நடைபெற்ற ஃபெட்னா விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் ஆற்றிய உரை, அமெரிக்காவில் வாழக்கூடிய தமிழர்களுடைய மனதில் நமது கழகத் தலைவர் நிரந்தரமான ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறார் என்பதை உலக அரங்கிற்கு உணர்த்தியது. தலைவர் அவர்கள் பேசும்போது அரங்கில் எழுப்பிய கரவொலியே அதற்குச் சாட்சி. அதை கண்கூடாக நேரில் கண்டு மகிழ்வதற்கும், தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டு இந்த மாபெரும் நிகழ்வில் தமிழக அரசின் சாதனைகளைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கும் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இறுதியாக, தலைவர் அவர்களுக்காக ஒட்டுமொத்த அமெரிக்க தமிழ் சமூகமும் எழுந்து நின்று ஃபெட்னா அரங்கில் மரியாதை செலுத்தியது மெய் கூசச் செய்தது.







அமெரிக்க நாட்டின் கலிபோர்னியா மாநிலத்தில் சான் பிரான்சிஸ்கோவில் இருந்து தமிழ்நாடு திரும்பும் முன் சான் பிரான்சிஸ்கோ தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. புகழ் அன்பு மற்றும் திருமதி. கனகலட்சுமி மற்றும் அங்கு வாழக்கூடிய தமிழ் மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் சேவையாற்றி வரக்கூடிய சங்கத்தின் முன்னோடிகள் அனைவரையும் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.



அமெரிக்க நாட்டின் அரிசோனா மாநிலம் பீனிக்ஸ் அருகே இருக்கக்கூடிய நகரத்தின் மேயர் திரு. ஜெர்ரி வெயெர்ஸ், கிளின்டேல், அரிசோனா அவர்களைச் சந்தித்து பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசப்பட்டது. கொமடிக்கா மகேஷ், திரு. சக்தி மற்றும் அந்த மாநகராட்சியின் மேயர் ஆகியோருடன் கல்வி, வர்த்தகம், சுற்றுலா, 'ட்வின் சிட்டி' மற்றும் துணை நகரங்கள் உருவாக்குவது பற்றிய அவசியமான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது உடன் வந்திருந்த தமிழர்கள் ஜல்லிக்கட்டு பற்றியும், ஜல்லிக்கட்டு நடத்திய போராட்டத்தைப் பற்றியும் சொல்லும்போது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, பீட்டா ஒரு பிரச்சனை செய்யக்கூடிய எந்தவித புரிதலும் இல்லாத ஓர் அமைப்பு, அவர்களுக்கு என்னையும் பிடிக்காது என்று அவருடைய தனி அறைக்குள் அழைத்துச் சென்று பீட்டாவுக்கு எதிராக நடந்த போராட்டங்களை எல்லாம் காட்டி விளக்கினார். தன்னை ஒரு அரசியல்வாதியாக இந்த சமூகம் அறிவதை விட நல்ல 'ஸ்டேட்ஸ்மேன்' என்றுதான் என்னுடைய சரித்திரத்தில் தெரிவிக்கப்பட விரும்புகிறேன் என்று அழகாகக் கூறினார். நல்லதோர் தொலைநோக்கு பார்வை கொண்ட அவரைச் சந்தித்ததில் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தமிழ்நாட்டுக்கு அவரை அழைத்ததாகவும், குறிப்பாக நமது ஊரில் இருக்கக்கூடிய கோவில்களையும், கடற்கரையையும் காண ஆவல் என்று தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டது. அரிசோனாவுக்கும் நமது ஊருக்கும் ஒரு நல்ல சமூகத் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று முயற்சி அளிப்பதாக உறுதி அளிக்கப்பட்டது.





ASU என்று அழைக்கப்படுகின்ற அரிசோனா மாகாண பல்கலைக்கழகம் அமெரிக்க நாட்டில் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்று. கிட்டத்தட்ட 60,000 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இந்திய நாட்டில் இருந்து பல்வேறு மாணவர்கள் படிக்கிறார்கள். நேற்று அந்த பல்கலைக்கழகத்திற்கு அரிசோனா மாநிலம் போனிக்ஸ் சேர்ந்த திரு. குமட்டிக்கா மகேஷ் அவர்களுடன் சென்று இரண்டு விடயங்கள் கண்டறியப்பட்டது. ஒன்று சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியும், ஆராய்ச்சியும் அங்கு எப்படி நடந்து கொண்டிருக்கிறது, அந்தப் பல்கலைகழகத்திடமிருந்து எப்படி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பொறியியல், சுற்றுச்சூழல் மற்றும் 'லிபரல் ஆர்ட்ஸ்' என அழைக்கப்படக்கூடிய கலை கல்லூரிகளுடன் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவது, தமிழ்நாட்டு மாணவர்கள் அங்கு கல்விக்காக செல்வதற்கான வாய்ப்பையும் கண்டறிவது என கிட்டத்தட்ட ஒரு மூன்று மணி நேரம் இந்தப் பல்கலைக்கழகத்தில் இரண்டு முனைவர்களுடன் உரையாடப்பட்டது. மேலும், சுற்றுச்சூழலுக்கு ஏற்புடைய கட்டிடங்களை உருவாக்குவதில் பெரும் ஆராய்ச்சியும், அந்தக் கட்டிடங்களைக் கட்டி வெயில் காலத்திலே குறிப்பாக அரிசோனா பாலை நிலத்தில் இருக்கக்கூடிய பகுதி காரணத்தினால் வெப்பம் உள்ளே வராமல் குளிர்சாதனங்களை குறைவாகப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உருவாக்குவதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்து மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பல ஆராய்ச்சிகள் மூலம் அவர்கள் கண்டறிந்த விடயங்களைப் பற்றி நம் தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்களுக்கும், கல்லூரிகளுக்கும் 'டெக்னாலஜி டிரான்ஸ்ஃபர்' என்று சொல்லக்கூடிய அவர்களுடைய அந்த ஆராய்ச்சியின் பலனை அனைவருக்கும் பயன்படக்கூடிய விதமாக ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொண்டு வேலை செய்வதற்குத் தயாராக உள்ளார்கள். ஆதலால் இதனைப் பயன்படுத்திக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தை தொடர்பு கொண்டால் அதற்கான உதவி செய்ய காத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றது.



---



நியூயார்க்கிலிருந்து டாலஸ் வழியாக டென்னசி/கான்சாஸ் நகருக்கு புறப்பட்டு டெக்சாஸ் மாநிலம் டல்லாஸ் வந்தடைந்த பிறகு, அங்கிருந்து டென்னசி/கான்சாஸ் செல்லக்கூடிய விமானம் புயல், வெள்ளம் காரணத்தினால் ரத்து செய்யப்பட்டதால், அன்பு சகோதரர் திரு. மகேஷ், சித்ரா மகேஷ் (எழுத்தாளர்) அவர்களின் இல்லத்திலே தங்கியிருந்து, தமிழ்நாட்டைச் சார்ந்த பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரக்கூடியவர்களைச் சந்தித்து இன்று இருக்கக்கூடிய அரசியல், திராவிட சித்தாந்தம் போன்றவற்றை மூன்று, நான்கு மணி நேரம் பேசிக் கொண்டிருந்த்தில் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. தமிழ்நாடு சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும், இந்திய நாட்டிலேயே மிகப்பெரிய முன்னேறிய மாநிலமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு மேற்கத்திய நாடுகள் போல் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று எங்கு இருந்தாலும் தமிழர்களைப் பற்றியும், தமிழ்நாட்டைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டு அதற்காக செயல்படக்கூடிய இந்த நல்ல உள்ளங்களுக்கு எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## சர்வதேச உறவுகள் மற்றும் முதலீட்டு மேம்பாடு

இத்தாலி நாட்டின் The Honourable Raffaella Valentini, Consul General Of Italy in Los Angels, Phoneix அவர்களுக்கு ஒரு விருந்தளிப்பு விழா நடந்தது. அதனை பீனிக்ஸ் பொருளாதாரம் மற்றும் வர்த்தக அமைப்பு நடத்தியது. அவ்விருந்திற்கு விருந்தினர்களாக வாரிய தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி அழைக்கப்பட்டிருந்தனர். அதில் கலந்து கொண்டு அந்தப் பகுதியில் மெஜாரிட்டி லீடர் லியோ பயாஸ்யூசி மற்றும் திரு. மைக்கேல் கார்போன் (வைஸ் சேர்மன், பொருளாதாரம், வர்த்தகம், விவசாயம், கிராமப்புற சூழல் பிரதிநிதிகள் சபை), அரிசோனா மாநிலத்தின் பிரதிநிதிகள் சபை திரு. டேவிட் குக், மற்றும் அரிசோனா காமர்ஸ் அத்தாரிட்டி திரு. கேலப் ரோட்ஸ் ஆகிய பல்வேறு மாகாண அரசு சார்ந்தவர்களைச் சந்தித்து உரையாடியதில் பெரும் மகிழ்ச்சி. மேலும், பல்வேறு அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடியதில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது பெரிய வர்த்தக மாநிலமாக திகழ்கிறது என்றும், கல்வி, சுற்றுச்சூழல் சார்ந்த தொழில்களை முன்னெடுக்க அற்புதமான வாய்ப்பு தமிழகத்தில் இருக்கிறது என்றும், நீங்கள் தமிழகத்துக்கு வர வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது.





அவர்கள் நிச்சயமாக வருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள், தொடர்பிலும் இருக்கச் சொல்லி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம், பாராளுமன்றம் இல்லாத சமயங்களில் நீங்கள் எல்லாம் மறுபடியும் இங்கே வர வேண்டும், பல்வேறு புரிந்துணர்வு, பல்வேறு தொழில் முன்னேற்றம், கல்வி போன்ற விஷயங்களில் நம் முன்னெடுப்புகளை எடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டனர். அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து இதுபோன்ற முயற்சியை எடுத்து தமிழ்நாட்டுக்கும், நமது நாட்டிற்கும் நன்மை பயக்கக்கூடிய விஷயங்களை செய்வோம் என்று உறுதி அளிக்கப்பட்டது. குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் இது போன்ற முன்னெடுப்புகளை எடுப்பதற்கு அவர்கள் காட்டக்கூடிய ஆர்வத்தை நமது வாரியம் மனதார பாராட்டுகிறது என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னெடுப்புகளை அயலக வாழ் தமிழர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அதோடு தமிழகத்துடன் பல்வேறு விதமான வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தி தாய் நிலத்துடன் உறவைப் பேண அணியமாக இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு இந்த சந்திப்பு என்றும் குறிப்பிடப்பட்டது.



உலகத் தமிழ் முதலீட்டாளர் மாநாடு சென்னையில் லீலா நட்சத்திர விடுதிக் கூட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கலந்து கொண்டு சிறப்பித்த முதலீட்டாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் சார்பாக அன்பும் நன்றிகளும் தெரிவிக்கப்பட்டது. உடன் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், திரு. சிவராஜா ராமநாதன், திரு. பாலா சுவாமிநாதன், திரு. கணபதி முருகேஷ், திரு. ஸ்ரீதர் வேம்பு, திரு. குற்றல் வீரபத்திரன் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.










இலங்கை தூதரகத்தின் உயர் துணை ஆணையர் திரு. வெங்கடேஸ்வரன் அவர்களின் அழைப்பின் பேரில் மாண்புமிகு சிறுபான்மையினர் மற்றும் அயலக தமிழர் நலன் துறை அமைச்சர் அண்ணன் திரு. லு.நீ. மஸ்தான் அவர்களின் அறிவுறுத்தல் படி சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில் தூதரக உயர்த் துணை ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் தமிழர்களின் வாழ்வியலை மேம்படுத்தும் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. நிகழ்வில் இலங்கை தூதரக முதன்மை செயலாளர் பிரசாந்தி கிருஷ்ணமூர்த்தி உடன் இருந்தார்.



## சட்ட உதவி மற்றும் நலத்திட்டங்கள்

திருமதி. கவிதா மற்றும் திரு. பாலாஜி அவர்கள் சென்னையை பூர்வீகமாக கொண்டவர்கள். குன்றக்குடிக்கு அருகே ஒரு குழந்தைகள் காப்பகத்தை நடத்தி வருகிறார்கள். குறிப்பாக சிறு வயதில் தங்களது குடும்பங்களால் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து பின் பள்ளி, கல்லூரிகளில் சேர்த்து படிக்க வைத்து, அக்குழந்தைகளை குடும்பத்தில் ஒருவராக தங்கள் குழந்தைகளைப் போல எண்ணி அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி, கல்லூரி படிப்பு, திருமணம் போன்ற அனைத்து விதமான குடும்ப கடமைகளையும் இவர்களே பொறுப்பேற்று செய்து வருகின்றனர். வருடம் ஒருமுறை அல்லது இரண்டு முறை ஒரு சுற்று பயணத்திற்கு குடும்பத்துடன் அழைத்துச் சென்று வருகின்றனர். அறக்கட்டளையை நடத்தி வரும் வழக்கறிஞர் திருமதி. கவிதாவையும் வழக்கறிஞர் திரு. பாலாஜி அவர்களையும் சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. டென்னிசி மாநிலம் மென்சஸ் நகரத்தில் மற்றும் மிசிசிபி மாநிலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தன் தாய் தந்தையை இழந்த குழந்தையை தமிழ்நாட்டிற்கு அழைத்து வர அவரின் சித்தியும், பாட்டியும் பரிதவித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் புலம் பெயர் தமிழர் நல வாரியத்தை அணுகி இருந்தார்கள். அந்தக் குழந்தைக்காக பல்வேறு தமிழ் அமைப்புகளும் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களும் உதவி செய்து வரக்கூடிய சூழ்நிலையிலே, சட்ட சிக்கல்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும், அமெரிக்க நாட்டின் சட்டம், குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் (CPS), கவுண்டிங் கோர்ட் போன்றவற்றில் இருக்கக்கூடிய நுணுக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இவர்களைச் சந்தித்து இவர்களுடன் உரையாடியதில் பெரும் மகிழ்ச்சி. புலம்பெயர்ந்த தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது. பெரும் உதவியாக இவர்களுடைய அறிவுரையும், அனுபவங்களும் இருந்தது என்றால் அது மிகையாகாது.





அமெரிக்காவில் மிசிசிப்பி மாகாணத்தில் தாய் தந்தையை இழந்த தமிழ்நாட்டை சேர்ந்த குழந்தை (உறவினரல்லாத) அண்டை வீட்டாரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் அக்குழந்தையின் குடும்ப உறவினர்கள் அயலகத் தமிழர் நல வாரியத்தை அணுகி குழந்தையை இந்தியாவிற்கு அழைத்து வர உதவி கோரினார்கள். இதை மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக அக்குழந்தையை இந்தியாவிற்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த உத்தரவிட்டார்கள். அதன் ஒரு பகுதியாக அக்குழந்தையின் குடும்ப உறவினர்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் அயலகத் தமிழர் நல வாரியம் செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று அமெரிக்காவின் தெற்கு பகுதியில் டென்னிசி மாநிலத்தில் உள்ள மெல்பெசட் மாநகரத்தில் உள்ள அக்குழந்தையின் சிற்றன்னையும், பாட்டியும் அந்நகர தமிழ்ச் சங்க உறுப்பினர்களைச் சந்தித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மாண்புமிகு அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களின் ஆலோசனைப்படியும், அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக அமெரிக்க நாட்டின் உறுப்பினர் திரு. கால்டுவெல் வேல் நம்பி அவர்களுடன் இணைந்து அக்குடும்பத்தினரைச் சந்தித்து, அட்லாண்டாவிலிருந்து வந்திருந்த இந்திய நாட்டு தூதரக திரு. ராஜு கந்தசாமி மற்றும்





திரு. மினி நாயர் அவர்களுடன் இணைந்து ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திலே டல்லாஸ் பகுதி திரு. சக்திவேல், சார்லோட்டைச் சார்ந்த திருமதி. ரோகிணி, ராலே பகுதி வட கரோலினா REACTION- Response Emergency Access & Care To Indian Overseas Network Team Inc திருமதி. லாவண்யா, மிட் சவுத் திரு. வாசுதேவன், திரு. கல்யாண், திரு. திருமகள் தியாகராஜன், திரு. ரேகா பிள்ளை, திரு. கேமெலியோ ஜோன்ஸ், திரு. பிரியா நாகராஜ், திரு. ராஜி வேல்ராஜன், திரு. கே.பி ராமநாதன், திரு. விக்னேஸ்வரன் சிவசுப்ரமணியம், திரு. சூரியன் பொன்னுசாமி, திரு. செந்தில் வி சந்திரன், திரு. சங்கர் மகாலிங்கம் மற்றும் திரு. சக்திவேல் ராம் இவர்களுடன் இணைந்து கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் கலந்தாய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதற்கு முன்னதாக நியூயார்க் அமெரிக்க வழக்கறிஞர் திரு. நிலா, மற்றும் திரு. பாலாஜி ஆகியோருடனும் இப்பிரச்சினையை சட்டப்படி எப்படி அணுகுவது என்று ஆலோசனை கேட்டு, அதன் தொடர்ச்சியாக இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைப்படி இந்திய வெளியுறவு அமைச்சகத்துடன் சேர்ந்து அக்குழந்தையை மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வர தேவையான சட்ட உதவி, பொருளாதார உதவி செய்வோம் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சங்க உறுப்பினர்களும் குறிப்பாக வட அமெரிக்க தமிழ்ச் சங்கம் (ஃபெட்னா) கூட்டமைப்பின்



தலைவர் பெரு மரியாதைக்குரிய திரு. பாலா சாமிநாதன் ஆகியோருக்கும் இக்கூட்டத்தை சிறப்பாக நடத்த உதவிய அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பாகவும், அயலகத் தமிழர் நல வாரியம் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.











தமிழக அரசின் அயலக தமிழர் நல வாரியத்தின் மூலம் லண்டன் வாழ் தமிழர்களுக்கும், அங்கே தங்கி படிக்கக்கூடிய தமிழ் மாணவர்களுக்கும் சட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வை முன்னின்று அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் திரு. ஃபைசல் அவர்கள் மேற்கொண்டார்கள். கலந்து கொண்ட மாணவர்களுக்கு வழக்கறிஞர்கள் திரு. பிரதாப், திரு. சஹாபுதீன், திரு. அருண் மற்றும் இம்மிகிரேசன் அட்வைசர் திரு. பத்ரி ஆகியோர் அறிவுரை வழங்கினர்.



## வாரியக் கூட்டங்கள் மற்றும் பொறுப்புகள்

நேற்று புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் முதல் கூட்டம் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இனிதே நடைபெற்றது. கூட்டத்திற்கு வாரிய தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி, சிங்கப்பூரைச் சேர்ந்த திரு. ராம், அரபிய அமீரகத்தைச் சேர்ந்த திரு. மீரான், மும்பையைச் சேர்ந்த திரு. மீரன், லண்டனிலிருந்து திரு. முகமது பைசல், சென்னை திரு. புகழ் காந்தி, மொரிசியஸ் நாட்டின் முன்னால் துணைப் பிரதமரும், புலம்பெயர்ந்த தமிழர் நல வாரிய குழு உறுப்பினர் திரு. ஆறுமுகம் பரசுராம், அமெரிக்காவிலிருந்து திரு. கால்டுவெல் நம்பி, ஆணையர் திருமதி. ஜெசிந்தா இ.ஆ.ப., பொது செயலாளர் திரு. ஜெகநாதன் இ.ஆ.ப., நிதித்துறை துணை செயலாளர் திருமதி. லக்ஷ்மி பவ்யா தன்னீரு இ.ஆ.ப., வெளிநாட்டு மனிதவள நிறுவனம் மற்றும் உள்துறை அமைச்சக அதிகாரிகள், சைபர் செல் காவல் கண்காணிப்பாளர் திருமதி. சண்முக பிரியா இ.கா.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரக துணை இயக்குநர் திரு. ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பல்வேறு திட்டங்களைப் பற்றியும், கிழக்கு ஆசியா, வளைகுடா நாடுகளில் வாழக் கூடிய தமிழர்களின் தேவைகளும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பியா போன்ற நாடுகளில் வாழக் கூடிய தமிழர்களின் தேவைகளைப் பற்றியும், அயலகத் தமிழர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துவது குறித்தும், வெளிநாடுகளில் பணி புரிவோர், அவர்களுடைய குழந்தைகளுக்கான கல்வி, திருமணம் ஆகியவற்றுக்கு சிறப்பு திட்டங்கள் தீட்டுவதற்கும் பல்வேறு திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடல் நடைபெற்றது. சிறப்பான இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் அவர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும், குறிப்பாக இப்படிப் புலம்பெயர்ந்த அயலகத் தமிழர் நலனுக்காக ஓர் வாரியத்தை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைத்த முதல்வர் அவர்களுக்கும் அயலகத் தமிழர்களின் நல வாரியத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.








எழிலகத்தில் நடந்த கூட்டத்தில் அயலக தமிழர் நல வாரியத்தின் சார்பில் நடைபெறப் போகும் முதல் உறுப்பினர்கள் கூட்டத்திற்கான கலந்துரையாடல்கள் மற்றும் முன்னோட்ட திட்டங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான முதல் கூட்டம் குறித்தான கலந்துரையாடல் வாரியத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அயலக தமிழர் நல வாரிய ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் ஐ.ஏ.எஸ் அவர்களும், உதவி இயக்குனர் திரு. ரமேஷ் அவர்களும் கலந்து கொண்டனர்.






அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவராக பொறுப்பேற்ற பின், வாரியத்தின் உறுப்பினர்கள் அனைவருடன் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர் மற்றும் மாண்புமிகு தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துக்கள் பெறப்பட்டது. உடன் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்கள் - மொரிஷியஸ் நாட்டில் வசிக்கும் திரு. ஆறுமுகம் பரசுராமன்; லண்டனில் வசிக்கும் திரு. முஹம்மது பைசல்; ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் திரு. சித்திக் சையது மீரான்; வடஅமெரிக்காவில் வசிக்கும் திரு. கால்டுவெல் வேள்நம்பி; சிங்கப்பூரில் வசிக்கும் திரு. ஜி.வி.ராம் என்கிற கோபாலகிருஷ்ணன் வெங்கடரமணன்; மும்பையில் வசிக்கும் திரு. அ. மீரான் மற்றும் சென்னையில் வசிக்கும் வழக்கறிஞர் திரு. புகழ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.









அயலக தமிழர் நல வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களும் இன்று மாண்புமிகு வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்களை எழிலகத்தில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டனர். உடன் அத்துறையின் மதிப்புயர் ஆணையர் திருமதி. ஜெசிந்தா IAS அவர்களும் உடனிருந்தனர்.



அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கூட்டம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை ரெசிடென்சி கிளப்பில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வாரியத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்வில் பல நாடுகளிலும் இருந்து வந்து பங்கேற்ற அரசால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதிக்கு உட்பட்ட தமிழர்களின் தேவைகளை பற்றி விளக்கினார்கள். உடன் அயலகத் தமிழர் நல வாரியம் உறுப்பினர் மொரிஷியஸ் நாட்டில் வசிக்கும் திரு. ஆறுமுகம் பரசுராமன்; லண்டனில் வசிக்கும் திரு. முஹம்மது பைசல்; ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் திரு. சித்திக் சையது மீரான்; வடஅமெரிக்காவில் வசிக்கும் திரு. கால்டுவெல் வேள்நம்பி; சிங்கப்பூரில் வசிக்கும் திரு.ஜி.வி.ராம் என்கிற கோபால கிருஷ்ணன் வெங்கடரமணன்; மும்பையில் வசிக்கும் திரு. அ. மீரான் மற்றும் சென்னையில் வசிக்கும் வழக்கறிஞர் திரு. புகழ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பண்பாடு மற்றும் பாரம்பரிய மேம்பாடு

ஐக்கியநாட்டு சபையின் நூலகத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட ஏறுதழுவுதல் (ஜல்லிக்கட்டு) பற்றிய ஆவணப் புத்தகமான "Thunderous Run Bountiful Harvest" நூலை நூலகப் பிரதியாகக் கொடுக்கப்பட்டது. நூலகத்தில் புத்தகத்தை வைப்பதாக உறுதி அளித்துள்ளார்கள். இதுபோன்ற கலாச்சார அடையாளமான பாரம்பரிய கால்நடைகள் சார்ந்த விடயங்களுக்கு ஐக்கிய நாட்டு சபை மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதாக அந்த நூலகத்தின் தலைவர் தெரிவித்தார். தமிழ்நாட்டில் நடைபெறக்கூடிய ஏறுதழுவுதல் (ஜல்லிக்கட்டு), கொங்கு பகுதியின் காங்கேயம் கால்நடை, கொரங்காடு மேய்ச்சல் நிலத்தைப் பற்றி வாரியத் தலைவரும், அறக்கட்டளை உறுப்பினர் திரு. சுந்தர் கணேசன், பொறியாளர் திரு. கார்த்திக் ராஜ்குமார் ஆகியோர் எழுதிய இந்த நூலை ஐக்கிய நாட்டு சபையில் இடம்பெற செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.



தென்கொரியாவில் உள்ள சியோல் நகரில் கொரியத் தமிழ்ச் சங்கத்தின் தமிழர் திருநாள் பொங்கல் விழா - 2023 திருவள்ளுவர் ஆண்டு 2054 தைத்திங்கள் 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று கச்சான் பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கொரியாவில் கொரோனா பெருந் தொற்றின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பொங்கல் நிகழ்வுகள் இணைய வழி நிகழ்வாக நடைபெற்ற நிலையில், இவ்வாண்டு பொங்கல் விழா நேரடி விழாவாக முன்னெடுக்கப்பட்டு கொரியாவின் பல்வேறு பகுதியிலிருந்து குழந்தைகள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்திய தூதரகத்தின் கான்சுலார் நரேந்திர சர்மா, மாண்புமிகு தூதர் அமித் குமார் அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். இளைஞர்களால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்படும் கொரிய தமிழ்ச் சங்கத்தினை அரசியல் பிரமுகரான திரு. காரை செல்வராஜ் மற்றும் ஊடகவியலாளர் மு. ஆசிப் ஆகியோருடன் இணைய வழி நேரலையில் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கப்பட்டது.



கனடாவின் நிதித் துறையில் முன்னணி வகிக்கும் தமிழர்கள் நிதியியல் (வீழிதுஷ்யிவி ஷ்ஜ ய்ஷ்ஜழிஜஉள - வீஷ்ய்) அமைப்பு, டொராண்டோ பங்குச் சந்தையில் (வீரீயீ) சந்தை நிறைவு விழாவை நடத்தி, தமிழ் சமூகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. தமிழ் மரபுத் திங்கள் தொடங்கிய ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, கனடாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமைக்கு தமிழ் மக்கள் ஆற்றியுள்ள மற்றும் ஆற்றிவரும் மகத்தான பங்களிப்பைப் போற்றும் வகையில் அமைந்தது. நிதித் துறையில் தமிழர்களின் அதிகரித்து வரும் இருப்பு மற்றும் செல்வாக்கை இந்த விழா வெளிப்படுத்தியது.





போலந்து நாட்டின் தலைநகர் வார்ஷாவில் மூன்றாவது முறையாக அறுவடை திருநாளான 'பொங்கல் திருவிழா' போலந்து வாழ் தமிழ் குடும்பங்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஒன்றிணைந்து போலந்து தமிழ் சமூகத்துடன் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்த பொங்கல் திருவிழாவை மதிப்பிற்குரிய தலைமை விருந்தினர், மாண்புமிகு திருமதி. நக்மா மொஹமது மாலிக் (போலந்து மற்றும் லிதுவேனியா குடியரசுக்கான இந்திய தூதர்) அவர்கள், மற்றும் திரு. கிருஷ்னேந்து பானர்ஜி (போலந்து மற்றும் லிதுவேனியா குடியரசுக்கான இரண்டாம் செயலாளர்) அவர்கள் முன்னிலையில் கலைநிகழ்ச்சிகளுடன் நடத்தப்பட்டன.

கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக மாண்புமிகு திருமதி. நக்மா மொஹமது மாலிக் அவர்களால் குழந்தைகளுக்கு திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டது. மேலும் இவ்விழாவை சிறப்பிக்கும் வகையில் ஒரு புதிய முயற்சியாக போலந்தில் மற்ற மாகாணத்தில் உள்ள தமிழ் சமூகத்துடன் இணையதளம் (காணொளி அழைப்பு) வாயிலாக இணைந்து பொங்கல் வாழ்த்துக்களையும், தலைமை விருந்தினரின் உரையாடலும் பரிமாறிக்கொள்ளப்பட்டது. நமது கலாச்சாரப் பண்பாடு ரீதியில் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், பாரம்பரியமான தின்பண்டங்கள் மற்றும் பொங்கல் சிறப்பு விருந்துடன் இனிதே பொங்கல் விழா நடைபெற்றது.







தமிழர் திருநாள், உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒன்றினையும் நன்நாள். நார்வே நாட்டில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் இணைந்து பொங்கல் திருவிழாவை கடும் பனிப்பொழிவுக்கு இடையே ஓஸ்லோவுக்கு அருகே உள்ள சைலிங் என்ற ஊரில் தமிழர் மரபை போற்றும் வகையில் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

விழாவில் பங்கேற்றவர்களுக்கு நமது மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பேசிய பொங்கல் வாழ்த்து காணொளியும், அதனுடன் வாரியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியும் பகிரப்பட்டது மன மகிழ்ச்சியை அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டது. மேலும் அவர்களிடையே அயலகத் தமிழர் நல வாரியத்தின் பணிகள் பற்றிய விரிவான காணொளிகளும் ஒளிபரப்பப்பட்டது.





இங்கிலாந்து நாட்டில் பாரம்பரிய தமிழ் பொங்கல் திருவிழா மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. நியூபரி தமிழ் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழர்கள் ஒன்று கூடி தைத்திருநாளை வரவேற்கும் விதமாக பொங்கல் வைத்து இயற்கையை வழிபட்டனர். மேலும் கோலம் போடுதல், கும்மியடித்து நடனம் ஆடுதல் என தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தனர்.






அயலகத் தமிழர் தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றுமாக இரு நாட்கள் தமிழ்நாடு அரசின் சார்பாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஏற்பாடு செய்த உலகத் தமிழர் கூடல் சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான மாண்புமிகு தளபதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும் அயலக தமிழர்களுக்கான ஐந்து புதிய திட்டங்களை அறிவித்தார். அயலகத் தமிழர் தினத்தை முன்னிட்டு அரசு பள்ளி மாணவ மாணவிகள் அசத்தல் நிகழ்வாக மாதவரம் அரசுப் பள்ளியில் தூதமிழ்நாடு என்ற வடிவில் நின்று கவனம் ஈர்த்தனர்.










அயலகத் தமிழர் தினம் - 2023: சுதந்திர இந்தியாவில் 1967 க்கு பிறகான தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பீடு செய்யமுடியாத அளவு தன்னிறைவு பெற்றுள்ளதற்கு திராவிட சித்தாந்தமும், அதை நடைமுறைப்படுத்திய பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் போன்றோரின் செயல் திட்டங்களுமே காரணம். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' - என்ற முதுமொழிக்கேற்ப உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து, தமிழ் கூடலாக வரும் ஜனவரி 11 & 12 தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கில் பெருநிகழ்வாக நடைபெறவுள்ளது. அயலகம் வாழ் தமிழர்களுக்காக தங்கள் தாய் மண்ணில் மக்கள் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் தலைமையில் இரண்டாம் ஆண்டாக நடைபெறும் இவ்விழாவில், அயலகத் தமிழர்களுக்கான நலத்திட்டங்களை தொடங்கி வைத்தல், பேச்சுப் போட்டி, திருக்குறள் வினாடி-வினா மற்றும் பாரதியார் பாடல்களை ஒப்புவித்தல் போன்ற போட்டிகளில் கலந்து கொள்ள இணைய வழியில் ஏற்பாடு, உள்ளூர் மற்றும் அயலகத் தமிழர்களிடையே (தொழில் முனைவோர்) இணைப்புகளை ஏற்படுத்துதல், அயலகத் தமிழர்களுக்கு பாதுகாப்பான முதலீடு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற பல நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளது. 'தமிழால் இணைவோம்! தரணியை வெல்வோம்' என்ற முழக்கத்தோடு சென்னை மாநகரில் கலைவாணர் அரங்கில் தமிழர் கூடலில் சங்கமிப்போம் வாருங்கள் என அழைப்பு விடுக்கப்பட்டது.





## 2025 அயலகத் தமிழர் தின விழா மற்றும் முக்கிய கூட்டங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அயலகத் தமிழர் தின விழா 2025 ஜனவரி 11 மற்றும் 12 தேதிகளில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய அரங்கில் கோலாகலமாக நடைபெற உள்ளது. 'எத்திசையும் தமிழனங்கே' என்ற கருப்பொருளில் நடைபெறும் இவ்விழா, உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்து, தமிழர் பண்பாடு, பொருளாதாரம், ஆராய்ச்சி, வேலைவாய்ப்புகள் போன்ற தளங்களில் புதிய வாய்ப்புகளை உருவாக்க முக்கியத்துவம் அளிக்கும் நோக்கில் 20-க்கும் மேற்பட்ட அமர்வுகளில் அயலகத் தமிழ் தொழில் முனைவோர் சந்திப்புகள், மருத்துவ சுற்றுலா, தமிழ்மொழி கல்வி உள்ளிட்ட தலைப்புகளை உள்ளடக்கும். வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தமிழ் வல்லுநர்கள், தமிழ்நாட்டின் மாணவர்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தங்களின் அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்வார்கள். தொழில்துறை கூட்டுறவு நட்புறவுகளை ஊக்குவிக்கும் சிறப்பு வர்த்தக கூட்டங்கள், தமிழ்நாட்டின் தொழில்நுட்ப






சாதனைகள் மற்றும் பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் கண்காட்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்வின் முக்கிய அங்கமாக அமையும். மேலும், 'வேர்களைத் தேடி' பண்பாட்டு சுற்றுலா திட்டத்தின் மூன்றாவது கட்டமாக 10-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த தமிழ் வம்சாவளியினர் பங்கேற்று தமிழகத்தின் பாரம்பரியத்தை அனுபவிக்க உள்ளனர். உலகத் தமிழர்களை இணைக்கும் இவ்விழா, தமிழர் செழுமையும், பாரம்பரியத்தின் பெருமையும் உலகிற்கு வெளிப்படுத்தப்படும் மேடையாக விளங்கும். (31 December 2024)







விவசாயத் தொழிலாளர்கள் கட்சி மற்றும் தமிழகக் கட்டிட தொழிலாளர் மத்திய சங்கம், புலம்பெயர் தொழிலாளர் உரிமைக் கூட்டமைப்பு நடத்திய 'புலம்பெயர் தமிழர்களின் பிரச்சனைகள் மற்றும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகள்' குறித்த சிறப்பு ஆலோசனைக் கூட்டம் 22/10/24 அன்று சென்னையில் எலும்பூர் இக்சா மையத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுகள் வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆவடி சா.மு.நாசர் அவர்களும், வாரிய தலைவர் திரு.கார்த்திகேய சிவசேனாபதி அவர்களும், வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுடன் கலந்துகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய அயலகத் தமிழர் நல வாரியம் இதுவரை மேற்கொண்டுள்ள செயல்பாடுகள் மற்றும் களப்பணிகள் பற்றி உரையாற்றினார். பொதுச் செயலாளர் திரு. ஹி.சுந்தராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார். பொறியாளர் நீ.ஜெகதீசன் வரவேற்புரை வழங்கினார். கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் திரு. பொன்குமார் அவர்கள் கோரிக்கை விளக்க உரை வழங்கினார். மேலும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மற்றும் அயலகத் தமிழர் மாநில நிர்வாகிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். (29 October 2024)

## தாய்லாந்தில் மணிமேகலை மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழா

72. Event Report: Launch of Thai Translation of Tamil Epic Manimekalai
Date: 28 September 2024
Venue: Bangkok, Thailan

பண்டைய தமிழ் காவியமான மணிமேகலையின் தாய் மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழா பாங்காக், தாய்லாந்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்தியாவின் தாய்லாந்துக்கான தூதர், மாண்புமிகு திரு. நாகேஷ் சிங் அவர்கள், பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மணிமேகலையின் இலக்கிய மற்றும் கலாச்சார முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். தனது உரையில், தூதர் நாகேஷ் சிங், இந்தியா மற்றும் தாய்லாந்து இடையேயான நீண்டகால கலாச்சார மற்றும் வரலாற்றுத் தொடர்புகளைப் புரிந்துகொள்வதில் பண்டைய தமிழ் இலக்கியத்தின் பொருத்தத்தை ஒரு குறிப்பிடத்தக்க அவதானிப்பாகக் குறிப்பிட்டார். மணிமேகலையின் தாய் மொழிபெயர்ப்பை டாக்டர். சுவித் விபுல்ஸ்ரெஸ்த் செய்தார், அவரது புலமைப் பணி அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

**இந்த நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்:**

- ★ இலங்கையின் தாய்லாந்துக்கான தூதர், மாண்புமிகு திருமதி. விஜயந்தி எடிர்சிங்கே
- ★ மலேசியத் தூதரகத்தின் ஆலோசகர், திருமதி. ஜரின்
- ★ சுலலாங்கோர்ன் பல்கலைக்கழக கலைப் புலத்தின் முன்னாள் டீன், டாக்டர். பிரபோஜ் ஆவாவீன்ஹகம்
- ★ சென்னையைச் சேர்ந்த காணொலிச் செய்தி மூலம் பங்கேற்ற செம்மொழித் தமிழ் மத்திய நிறுவனத்தின் (ஸீணூளீவீ) இயக்குநர், டாக்டர். சந்திரசேகர்

இந்த நிகழ்வை ஒருங்கிணைத்த தாய்லாந்து தமிழ்ப் பேரவைக்கு சிறப்பு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, திரு. பி. தமிழ்ச்செல்வன், திரு. சுந்தரம், திரு. கார்த்திக், திரு. ஹுமாயூன்,



திரு. சரவண குமார், திரு. மாணிக்கவேல், மற்றும் திரு. மணிகண்டன் ஆகியோரின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தங்கள் வருகையின் போது அன்புடன் உபசரித்த தாய்லாந்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஆலோசகர் திரு. முத்து ராமச்சந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வு தாய்லாந்துக்கும் தமிழ்ப் படைப்பிலக்கிய உலகிற்கும் இடையிலான கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதிலும், தமிழ்ச் செம்மொழி மரபின் உலகளாவிய பொருத்தத்தைக் கொண்டாடுவதிலும் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.
(28 September 2024)



## அமெரிக்காவில் இளைஞர் மற்றும் தமிழ்ச் சங்க சந்திப்புகள்

UT Dallas-க்கு வருகை தந்ததும், அங்கு பயிலும் துடிப்பான தமிழ்ப் இளைஞர்களுடன் கலந்துரையாடியதும் ஒரு மகிழ்ச்சியான அனுபவம். நமது கலாச்சாரம் மற்றும் சமூகத்தின் மீதான அவர்களின் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பைக் கண்டது ஒரு உத்வேகமான அனுபவம். இந்த பயணத்தைத் தொடரவும், ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் போது அவர்களுடன் இணைந்து செயல்படவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். (12 September 2024)







வெள்ளி விழாக் கண்ட சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் இதுவரை தமிழுக்கும், தமிழ் சொந்தங்களுக்கும் ஆற்றிய தொண்டுகளுக்கெல்லாம் அங்கீகாரமாக தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலினை சந்திக்கும் வாய்ப்பு நிச்சயமாக சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கத்தின் புகழ் மகுடத்தில் உலகமெல்லாம் ஒளிவீச வைரமாமணி பதிக்கும் நிகழ்வாகும். இந்த வரலாற்று நிகழ்வில் தமிழ்நாடு முதல்வரின் புரட்சிகரமான உரையை மிக அருகில் இருந்து காணும் வாய்ப்பும், முதல்வரின் வாழ்த்துக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேரவையின் 37ஆவது தமிழ் விழா மலரையும், சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் சார்பாக சிறப்பு நினைவுப்பலகையையும் முதல்வரிடம் வழங்கி மகிழ்ந்தோம். நினைவுப் பரிசை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு முதல்வர், தமிழ் சமூகத்திற்காக சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் செய்து வரும் முயற்சிகளை எல்லாம் பொறுமையாக உள்வாங்கிக்கொண்டு வெகுவாக பாராட்டினார்.

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தின் புகழ் சூரியப் பேரொளியாய் பரவச் செய்த, இந்த வரலாற்று நிகழ்விற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த பேரவை Federation of Tamil Sangams of North America - FeTNA நிர்வாகக் குழுவிற்கும், அயலக தமிழர் நல வாரியம் (Non-Resident Tamils Board), திரு. கார்த்திகேய சிவசேனாபதி & திரு. கால்டுவெல் வேள்நம்பி அவர்களுக்கும், சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த சிகாகோ தமிழ்ச் சங்கத்திற்கும் (CTS- Chicago Tamil Sangam), தமிழ்நாடு அறக்கட்டளைக்கும் (Tamil Nadu Foundation, USA) நெகிழ்வுடன் நன்றி தெரிவிக்கிறது சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம். இவற்றுக்கெல்லாம் வித்திட்ட மற்றும் FeTNA பேரவை போன்ற மிகப் பிரம்மாண்டமான, உலக அளவிலான தமிழ்ப் பேரவை விழாவை ஒற்றுமையுடன் சிறப்பாக நடத்தியதற்கும், சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கும், தன்னார்வல தொண்டர்களுக்கும், மற்றும் நிர்வாகிகளுக்கும் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.







அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் தலைமையில் கலிபோர்னியா மாநிலம் ஃபே ஏரியா தமிழ்ச் சங்கத்தில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகள் பற்றி ஒரு கலந்தாய்வுக் கூட்டமும் அதில் கேள்வி பதில்களும் நடைபெற்றது. 250-க்கும் மேற்பட்ட அமெரிக்க வாழ் தமிழர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய பல்வேறு பிரச்சனைகளைப் பற்றியும், தமிழ்நாடு அரசு செய்து வரும் அயலகத் தமிழர்களுக்கான நல வாரியப் பணிகளைப் பற்றியும், அவர்களுடைய தேவைகளைப் பற்றியும் நல வாரியத் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களும், வாரிய உறுப்பினர் திரு. கால்டுவெல் வேள்நம்பி, திரு. புகழ் காந்தி ஆகியோரும் பேசினார்கள். ஃபே ஏரியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருமதி. ஜூலியட் ஆறுமுகம் வரவேற்புரையும், செயலாளர் திரு. ஜோசப் அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள். (06 September 2024)








சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து சிகாகோ நகருக்கு வந்தடைந்தேன். பேரன்பைப் பொழிந்து வரவேற்று நெகிழவைத்த தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி. (03 September 2024)












'நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த இல்லாண்மை ஆக்கிக் கொளல்.' (03 September 2024)



Date : 30.08.2024

முரசொலி

சான் பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளை நடைப் பயிற்சியுடன் தொடங்கி -

## முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்!

அமெரிக்காவிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சான்பிரான்சிஸ்கோ, ஆக. 30 -

சான்பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளை (29.8.2024) நடைப் பயிற்சியுடன் தொடங்கி - முதலீட்டாளர் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன் என்று அமெரிக்காவிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

சுறுசுறுப்பான நடைப் பயிற்சியுடன் சான் பிரான்சிஸ்கோவில் இன்றைய நாளினைத் தொடங்கி, மாலை நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தினமணி

## அமெரிக்காவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்

தொழில் நிறுவனங்களுடன் இன்று ஒப்பந்தம்

முரசொலி

அமெரிக்காவின் - சான்பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்றார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு!

தொழில் முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று முதல்வர் உரை நிகழ்த்தினார்!

"வாய்ப்புகள் குவிந்துள்ள பூமியில் உள்ளேன்" - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உடனான கலிபோர்னியா தமிழ்ப் பாரம்பரிய விழா உத்வேகம் அளித்தது. (03 September 2024)







வாய்ப்புகள் நிறைந்த அமெரிக்காவில், தமிழ்நாட்டின் செழிப்புக்காக ஆதரவைத் தேடிச் சென்றோம்.
(29 August 2024)






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2024 செப்டம்பர் 7 அன்று (அமெரிக்கா) சிக்காகோவில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவுள்ளார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் பங்கேற்க, உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க, கீழே உள்ள லிங்க்கைக் கிளிக் செய்து உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்:
https://chicago.cmstalininus.org (20 August 2024)














வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் 37வது தமிழ் விழாவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்காக வட அமெரிக்காவில் செயல்படக்கூடிய கலைஞர் அறக்கட்டளையின் சார்பாக கலைஞர் 100 என்ற விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் முன்னாள் ஒடிசா முதன்மைச் செயலர்




திரு. பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ், முன்னாள் மேற்கு வங்காள முதன்மைச் செயலர் திரு. பாலச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்புச் சகோதரர் அண்ணன் திரு. வேல்முருகன், திரு. ஆளூர் ஷா நவாஸ், திரு. கால்டுவெல் வேல்நம்பி, பாவலர் அறிவுமதி ஆகியோருடன் கலந்து கொண்டு கலைஞர் அவர்கள் செய்த பல்வேறு சமூகநீதி விடயங்களைப் பற்றி பேசியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சமூக நீதியும் கல்வி பரவலாக்கமும் இன்றைக்குத் தமிழர்கள் உலகம் முழுவதும் உயர்ந்த குடியாக, அறிவு சார்ந்த குடியாக, 13-க்குப் பின் இழந்த தமிழர்களுடைய பெருமைகளை 60-70 வருடங்களிலே மீட்டெடுத்திருக்கின்றோம் என்பதை நினைத்துப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே இந்த இயக்கத்தை நினைத்து நாம் ஒவ்வொருவரும் பெரும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைய வேண்டும். அதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பங்கு சாலச் சிறந்தது என்பதைக் கொண்டாடும் விதமாக நடந்த நிகழ்வினை ஒருங்கிணைத்த அன்பு சகோதரர்கள் வாஷிங்டன் சிவா, டாலஸ் சக்திவேல், நியூயார்க் பாலா, டாலஸ் பாண்டியன் மற்றும் இந்த நிகழ்வைத் தொகுத்து வழங்கிய திரு. செந்தில்வேல் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் கழகத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். (07 August 2024)





அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள சான் ஆண்டனியோ நகரத்தில் நடைபெற்ற வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தின் 37ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டு அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகள் குறித்தும்,





மாண்புமிகு முதல்வர் அவர்கள் அயலக வாழ் தமிழர்களுக்காக ஒரு வாரியத்தை உருவாக்கியதன் முக்கியத்துவத்தை பற்றியும் தலைவர் என்ற முறையில் எடுத்துரைத்தேன். உடன் வட அமெரிக்க உறுப்பினர் திரு. கால்டுவேல் வேல்நம்பி அவர்கள், ஐரோப்பிய உறுப்பினர் திரு. முகமது பைசல் அவர்கள் மற்றும் ஆணையர் திரு. கிருட்டிணமூர்த்தி அவர்களும் வழக்கறிஞர் ஆனந்த கோமதி மற்றும் புலம்பெயர்ந்து வாழக்கூடிய தமிழ் மக்களும் கலந்து கொண்டனர். (10 July 2024)

---

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் சார்பாக மே 12ஆம் தேதியன்று சித்திரைத் திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்வில் கலைமாமணி முனைவர் நித்யஸ்ரீ மகாதேவன், ஹ்ணூவீ கல்வி நிறுவனங்களின் நிறுவனர் & வேந்தர், முனைவர் திரு. கோ. விசுவநாதன், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர், முனைவர் திரு. பாலா சுவாமிநாதன், மகளிர் மேம்பாடு மற்றும் சமூக நீதிச் சிந்தனையாளர் திரு. துரை சந்திரசேகரன்ஆகியோருடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இந்நிகழ்வினை ஒருங்கிணைத்த சங்கத்தின் தலைவர் திரு. அறிவு மற்றும் திருமதி. புஷ்ப ராணி, திரு. சுந்தர் முத்துசாமி, திரு. பீட்டர், முன்னாள் வாசிங்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. ராஜாராம் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (26 May 2024)









அமெரிக்காவின் 'டெல்லவர் பெருநிலத் தமிழ்ச் சங்கத்தின்' நிகழ்வில் 11-05-2024 அன்று கலந்துகொண்டு அயலகத் தமிழர் நல வாரியத்தை மாண்புமிகு தலைவர் அவர்கள் உருவாக்கிய நோக்கத்தைப் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும், உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழ் மக்களுடைய தேவைகள் என்னென்ன என்பதைப் பற்றியும் அதற்கு வாரியம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி பேசியதோடு, அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகளை அயலகத்தில் வாழும் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்ததில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வமைப்பின் மூலம் 400-க்கும் மேற்பட்ட குழந்தைகள் தமிழ் கற்று வருவது உள்ளபடியே பெருமையாக இருக்கிறது. சங்கத் தலைவர் திரு. பாரதி பொண்ணப்பன், துணை தலைவர் திரு. கோபி கதிர்வேல், மற்றும் உறுப்பினர்கள் திரு. சுரேஷ் பரமசிவம், திரு. விஜய் செல்வராஜ், திரு. மனோகரன் ராமசாமி அவர்களுக்கும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். கலந்துரையாடலில் இப்போழுது அவர்களுடைய தேவைகளை எடுத்துரைத்தார்கள். அதனை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக சில சட்டத் திருத்தங்களையும் திட்டங்களையும் செயல்படுத்தப் பாடுபடுவேன் என்றும் உறுதியளித்திருக்கின்றேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்ற கனியன் பூங்குன்றனாரின் வாக்கு மெய்ப்படும் நேரமிது. (14 May 2024)



அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாகாணத்தின் டல்லாஸ் நகரில் மெட்ரோபிளக்ஸ் தமிழ் அகாடமியின் பத்தாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டதுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் குழந்தைகள் தமிழ் படித்து பட்டம் பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவராக கலந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அயலகத் தமிழர் நல வாரியத்தை மாண்புமிகு முதல்வர் உருவாக்கிய காரணங்களை எடுத்துரைத்தேன். அதேபோல் என்னென்ன வேலைகள் இந்த வாரியத்தின் மூலமாகச் செய்துகொண்டு இருக்கின்றோம், இங்கே இருக்கக்கூடிய தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன என்பதைப் பற்றி எல்லாம் டல்லாஸ் தமிழ் மக்களிடம் பேசியதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிகழ்வில் மெட்ரோபிளக்ஸ் தமிழ் அகாடமியின் தலைவர் திரு. தமிழ் மணி மற்றும் நிர்வாகக் குழு ஆசிரியர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள், 2000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். அயலகத் தமிழர் நல வாரியத்தின் வடஅமெரிக்க உறுப்பினர் திரு. கால்டுவெல் வேல்நம்பி, திரு. மகேஷ், திருமதி. சித்ரா மகேஷ், திரு. டேன் முருகானந்தம், திரு. சக்தி, திரு. தினகர் ரத்தினசபாபதி, திரு. வெற்றி மற்றும் பலருடன் கலந்து கொண்டதில் மகிழ்ச்சி அளிக்கிறது. 18000 கிலோமீட்டர் தொலைவில் வாழ்ந்தாலும் அமெரிக்க நாட்டிலே நமது தாய்மொழி தமிழையும், தமிழ் கலாச்சாரத்தையும், சங்க இலக்கியத்தையும் மாணவர்கள் படிப்பதைப் பார்க்கும் பொழுது பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர்களுக்கு

அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும், தமிழ்நாட்டின் அரசின் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவித்தேன். (10 May 2024)









தமிழ் புலம்பெயர்ந்தோருக்கான ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக, அமெரிக்கா முழுவதிலுமிருந்து 5000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் சிக்காகோவின் ரோஸ்மான்ட் கன்வென்ஷன் சென்டரில், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சரின் மாபெரும் புலம்பெயர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வை அயலகத் தமிழர் நல வாரியம் ஏற்பாடு செய்திருந்தது. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தமிழர்களின் அடையாளம், ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்தின் கொண்டாட்டமாக இந்த விழா அமைந்தது.

நிகழ்வு, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் அன்பான மற்றும் உத்வேகம் அளிக்கும் வரவேற்புரையுடன் தொடங்கியது. அவர் தமிழ்நாடு மற்றும் உலகளாவிய தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கு இடையேயான நீடித்த தொடர்பை வலியுறுத்தினார். தமிழ் சமூகத்தின் பங்களிப்புகளை அவர் பாராட்டினார். இதைத் தொடர்ந்து, சிக்காகோவில் உள்ள இந்திய துணைத் தூதர் திரு. சோம்நாத் கோஷ், தமிழ்நாட்டின் வளமான வரலாறு மற்றும் கலாச்சாரம், அத்துடன் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் அசைக்க முடியாத மீள்திறன் மற்றும் பங்களிப்புகள் குறித்து ஒரு சிறந்த உரையை நிகழ்த்தினார். மாண்புமிகு முதலமைச்சரின் தலைமை மற்றும் உலகளாவிய தமிழ் சமூகத்திற்கான அவரது அர்ப்பணிப்பையும் திரு. கோஷ் பாராட்டினார்.

முதலமைச்சர் தனது முக்கிய உரையில், தமிழ்நாட்டில் தனது ஆட்சி குறித்தும், உலகளாவிய தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கான தனது பரந்த பார்வை குறித்தும் உத்வேகம் அளிக்கும் உரையை நிகழ்த்தினார். 'எனது பணி தமிழ்நாட்டின் எல்லைகளுக்குள் நிற்பதில்லை. தமிழ்நாட்டில் இருந்தாலும் சரி, இங்கிருக்கும் அமெரிக்காவில் இருந்தாலும் சரி, உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு தமிழரின் நலன் மற்றும் செழிப்புக்காக நான் உழைக்கிறேன். நாம் அனைவரும் இணைந்து, தமிழ் அடையாளம் உலகளவில் கொண்டாடப்பட்டு வலுப்படுத்தப்படும் ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறோம்' என்று அவர் கூறினார்.

வட அமெரிக்காவுக்கான வாரிய உறுப்பினர் திரு. கால்டுவெல் வேள்நம்பி மற்றும் சிக்காகோ தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட பல முக்கிய புலம்பெயர்ந்தோர் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். திரு. வீரா மற்றும் திரு. சிவா ஆகியோரும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கு வகித்தனர். தமிழ்நாட்டிலிருந்து முதலமைச்சரின் செயலாளர் திரு. உமாநாத், கைடன்ஸ் மேலாண் இயக்குநர் திரு. விஷ்ணு, மற்றும் தொழில்துறை செயலாளர் திரு. ராய் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டு, உலகளாவிய தமிழ் உறவுகளை வளர்ப்பதற்கான மாநிலத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டினர். தமிழ்நாட்டிலிருந்து வந்த மூத்த காவல்துறை அதிகாரிகள் நிகழ்வின் பாதுகாப்பு மற்றும் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்தனர். வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு (ய்ளவீஹிபு) முழு வடிவத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது, தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒற்றுமையையும் உற்சாகத்தையும் இது வெளிப்படுத்தியது.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் நன்றி உரை:

தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தனது நன்றி உரையில், மாண்புமிகு முதலமைச்சரின் வருகைக்கும், உத்வேகம் அளித்த பேச்சுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். நிகழ்வை ஏற்பாடு செய்வதில் அவரது தலைமைக்காக திரு. கார்த்திகேய சிவசேனாபதிக்கு நன்றி தெரிவித்ததோடு, தமிழ் புலம்பெயர் சமூகத்தின் அசைக்க முடியாத ஆதரவையும் பாராட்டினார். 'அமெரிக்கா முழுவதிலுமிருந்து 5000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் கூடியிருப்பது அனைவருக்கும் ஒரு



பெருமையான தருணம்' என்று அவர் கூறினார். புலம்பெயர்ந்தோர், குறிப்பாக திரு. கால்டுவெல் வேள்நம்பி, திரு. வீரா, திரு. சிவா, மற்றும் சிக்காகோ தமிழ்ச் சங்கம் ஆகியோரின் அயராத முயற்சிகளுக்கு ஆழ்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தார். ய்ளவீஹிபு மற்றும் அமெரிக்காவில் உள்ள அனைத்து தமிழ் சங்கங்களுக்கும் அவர்களின் அபரிமிதமான ஆதரவுக்கு திரு. ராஜா நன்றி தெரிவித்தார். 'இந்த நிகழ்வு தமிழ் புலம்பெயர் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் பலத்தின் உண்மையான பிரதிபலிப்பாகும், மேலும் இந்த பயணத்தை ஒன்றாகத் தொடர நாங்கள் எதிர்நோக்குகிறோம்' என்று கூறினார். நாட்டிலிருந்து வந்து இந்த நிகழ்வை மகத்தான வெற்றியாக்கிய அனைவருக்கும் நன்றி கூறி, உலகளாவிய தமிழ் சமூகத்தை ஆதரிப்பதற்கான மாநிலத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார். (09 September 2024)




# திராவிட மாடல்

அமெரிக்காவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழ்!

அமெரிக்கா வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வரவேற்க பல மாநிலங்களில் இருந்து மக்கள் திரண்டு வந்தனர். எனக்குத் தெரிந்து 53 ஆண்டுகளில் சிகாகோ விமான நிலையத்தில் இப்படி ஒரு வரவேற்பு நிகழ்ந்ததில்லை. 'இது ஒரு கட்சியின் அரசல்ல.. ஒரு இனத்தின் அரசு' என்ற அவரின் வார்த்தைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

1971ல் நாங்கள் அளித்த சிறிய வரவேற்பையே அன்புடன் பல முறை சொன்னவர் கலைஞர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குழந்தைகளை அன்புடன் தொட்டுப் பேசி மகிழ்ந்ததையும், அனைவருக்கும் அளித்த புன்னகையையும் வரலாறு சொல்லிக் கொண்டே இருக்கும்.

திராவிட மாடல் உலகறியும் கோட்பாடு ஆகியுள்ளது.. தமிழரின் பொற்காலம் தொடங்கி விட்டது!

-சோம. இளங்கோவன், 53 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வரும் புகழ்பெற்ற மருத்துவர்

10 SEP 2024

SUNNEWSTAMIL SUNNEWS sunnewslive.in






மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் சிகாகோவுக்கு வருகை தந்தபோது, பெருமளவில் கலந்துகொண்டு வரவேற்ற உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் குறிப்பிடத்தக்க ஆதரவும் உற்சாகமும் இந்த நிகழ்வை உண்மையிலேயே மறக்க முடியாததாகவும், வெளிநாட்டில் உள்ள நமது தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் பலத்தின் அடையாளமாகவும் ஆக்கியுள்ளது. இந்த நினைவுகளைப் போற்றும் வகையில், நிகழ்வின் புகைப்படங்களை நாங்கள் பதிவிட்டுள்ளோம், அவற்றை நீங்கள் பதிவிறக்கம் செய்து பொக்கிஷமாகப் பாதுகாக்கலாம். உங்கள் அயராத முயற்சிகளுக்கும், அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கும் மீண்டும் நன்றி. அன்புடன், கார்த்திகேய சிவசேனாபதி, தலைவர், அயலகத் தமிழர் நல வாரியம். (05 September 2024)







### முதலீடுகள் மற்றும் பொருளாதார மேம்பாடு

**சிகாகோவில் உற்சாகமான முன்னேற்றங்கள்!**

தமிழ்நாட்டில் உற்பத்திப் பிரிவு மற்றும் வளர்ச்சி & உலகளாவிய ஆதரவு மையம் ஆகியவற்றை நிறுவுவதற்காக டிரில்லியன்ட் (Trilliant) நிறுவனத்துடன் ரூ.2000 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த மதிப்புமிக்க கூட்டாண்மைக்கு டிரில்லியன்ட் நிறுவனத்திற்கு நன்றி!







Date : 30.08.2024

## இந்து தமிழ் திசை



அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலினை, இந்திய துணை தூதர் ஸ்ரீகர் ரெட்டி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். உடன், துர்கா ஸ்டாலின்.

### சான் பிரான்சிஸ்கோ சென்றடைந்தார்

# முதல்வர் ஸ்டாலினுக்கு அமெரிக்காவில் உற்சாக வரவேற்பு

● சென்னை

அமெரிக்காவில் முதல்வர் ஸ்டாலினுக்கு இந்திய துணை தூதர் ஸ்ரீகர் ரெட்டி, மற்றும் அமெரிக்கா வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தமிழகத்துக்கு அதிக அளவில் முதலீடுகளை ஈர்க்கவும், படித்த இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மேலும் பல புதிய தொழில்களை தமிழகத்தில் உருவாக்கும் முயற்சியாகவும், முதல்வர் ஸ்டாலின் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். சென்னையில் இருந்து கடந்த 27-ம் தேதி இரவு விமானத்தில் புறப்பட்ட அவர், அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாகாணத்துக்கு நேற்று காலை சென்றடைந்தார். மனைவி துர்கா ஸ்டாலினும் உடன் சென்றுள்ளார்.

விமான நிலையத்தில் அமெரிக்கா வாழ் தமிழ் மக்கள் பெருந்திரளாக கூடி நின்று, முதல்வர் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். சான் பிரான்சிஸ்கோவுக்கான இந்திய துணை தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தமிழக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, முன்னாள் மத்திய அமைச்சர் நெப்போலியன் உள்ளிட்டோரும் முதல்வரை வரவேற்றனர் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தினகரன்

### அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு




அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்திற்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வந்து சேர்ந்ததும், அமெரிக்க வாழ் தமிழ்மக்கள் பெருந்திரளாக கூடி நின்று உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

# அமெரிக்காவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்

### விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு



தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் 17 நாள் அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். மாலையில் மாநாடு நடைபெற இருந்த நிலையில், காலையில் உற்சாகமாக உடற்பயிற்சியில் ஈடுபட்ட முதல்வர்.

சென்னை, ஆக. 30: தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 27ம் தேதி இரவு அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ மாகாணத்திற்கு சென்றார். நேற்று சான் பிரான்சிஸ்கோ விமான நிலையம் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினை அமெரிக்க வாழ் தமிழ் மக்கள் பெருந்திரளாக கூடி நின்று உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

நிகழ்ச்சியில் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்திய துணை தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் ஒன்றிய அமைச்சர் நெப்போலியன் ஆகியோரும் முதல்வரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அப்போது 'செம்மொழியான தமிழ்மொழியே..' பாடலுக்கு அமெரிக்க வாழ் தமிழ் இளைஞர்கள், இளம்பெண்கள் ஆடியதை முதல்வர் ஸ்டாலின் ரசித்து பார்த்தார். பின்னர், அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். முதல்வர் மு.க.ஸ்டாலினை அமெரிக்காவில் வரவேற்ற புகைப்படத்தை தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, 'கழுகு இறங்கி விட்டது' என்று புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

தொடர்ந்து, சான்பிரான்சிஸ்கோவில் நேற்று நடந்த முதலீட்டாளர்கள் சந்திப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைப்பு விடுத்தார். நாளை (31ம் தேதி) புலம் பெயர் தமிழர்களை மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசுகிறார். செப்டம்பர் 2ம் தேதி சிகாகோவில் உள்ள சர்வதேச முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்து பேசுகிறார். 7ம் தேதி அமெரிக்காவில் உள்ள அயலகத்தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார். தொடர்ந்து 9ம் தேதி தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் சந்திப்புகளை மேற்கொள்கிறார். அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 14ம் தேதி சென்னை திரும்புகிறார்.

## தினத்தந்தி

### முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு



தொழில் முதலீடுகளை ஈர்க்க பயணம்:

# முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அமெரிக்காவில் உற்சாக வரவேற்பு

### விமான நிலையத்தில் தமிழர்கள் திரண்டனர்





நைக் (Nike) நிறுவனத்துடன் அதன் காலணி உற்பத்தியை விரிவுபடுத்துவது குறித்தும், சென்னையில் ஒரு தயாரிப்பு உருவாக்கம்/வடிவமைப்பு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் பயனுள்ள பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

ஏற்கனவே தமிழ்நாட்டில் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து வரும் மற்றும் சுகாதாரத் துறைக்கான திறமைப் பட்டியலை உருவாக்க திட்டமிட்டுள்ள ஆப்டம் (Optum) நிறுவனத்துடன் ஈடுபட நேர்ந்தது. திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

முன்னேற்றம் வலுவாக உள்ளது. (05 September 2024)




**சான் பிரான்சிஸ்கோவில் மற்றொரு வெற்றிகரமான நாள்!**

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஓமியம் (Ohmium) நிறுவனத்திடமிருந்து ரூ.400 கோடி முதலீட்டைப் பெற்றுள்ளோம், இது 500 வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இது பசுமை ஆற்றல் உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதற்கும், நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். (01 September 2024)





அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் தலைமையில் கலிபோர்னியா மாநிலம் ஃபே ஏரியா தமிழ் சங்கம் அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகள் பற்றி ஒரு கலந்தாய்வுக் கூட்டமும் அதில் கேள்வி பதில்களும் நடைபெற்றது. 250 க்கும் மேற்பட்ட அமெரிக்க வாழ் தமிழர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் அவர்களுடைய பல்வேறு பிரச்சனைகளை பற்றியும் தமிழ்நாடு அரசு செய்து வரும் அயலக தமிழர்களுக்கான நல வாரியப் பணிகளைப் பற்றியும் அவர்களுடைய தேவைகளை பற்றியும் நல வாரியத் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதியும் வாரிய உறுப்பினர் திரு. கால்டுவெல் வேள்நம்பி, திரு. புகழ் காந்தி ஆகியோர் பேசினார்கள். ஃபே ஏரியா தமிழ் சங்கத்தின் தலைவர் திருமதி ஜூலியட் ஆறுமுகம் வரவேற்புரையும் செயலாளர் திரு ஜோசப் அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்








## சட்ட விழிப்புணர்வு

15 வருடங்கள் கழித்து மலேசியாவில் இருந்து தாயகம் திரும்பி தனது குடும்பத்துடன் இணைந்த ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வு.

அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக 20 நாட்களுக்கு முன்பு நமக்கு ஒரு விண்ணப்பம் கிடைத்தது. ரமேஷ் ராஜுவின் குடும்ப உறுப்பினர்கள் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு நோய்வாய்ப்பட்ட அவரை தாய்நாடு அழைத்து வர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து, நமது அயலகத் தமிழர் நல வாரியத்தின் துணை இயக்குனர் திரு. ரமேஷ், இந்திய தூதரகம் மற்றும் கோலாலம்பூரில் உள்ள மலேசிய அரசு அலுவலகத்தை தொடர்பு கொண்டு பிரச்சினையை எடுத்துக் கூறி உரிய நடவடிக்கைகள் எடுத்தனர். இதன் காரணமாக 15 வருடங்கள் கழித்து திரு. ரமேஷ் ராஜு என்பவரை அவரது குடும்பத்துடன் சேர்த்துள்ளனர். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்கு பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம் எடுத்த தமிழர் நலன் சார்ந்த பல்வேறு முன்னெடுப்புகளில் இதுவும் ஒன்று என்பதை நினைத்துப் பார்க்கையில் பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. (16 August 2024)










இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் 'தமிழர் பாரம்பரியம் போற்றும் அயலகத் தமிழர்கள்' என்கிற தலைப்பில் 24.05.2024 அன்று மாலை, நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினேன். இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சார்பாக வைக்கப்பட்ட சில கோரிக்கைகளைத் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக சில சட்டத் திருத்தங்களையும் திட்டங்களையும் செயல்படுத்தப் பாடுபடுவேன் என்றும் உறுதியளித்திருக்கிறேன்.

இந்நிகழ்வில் அயலகத் தமிழர் நலவாரியத்தின் ஐரோப்பிய உறுப்பினர் திரு. முஹம்மது பைசல், Rt.Honourable ஸ்டீவன் டிம்ஸ் னிஇண, ஈஸ்ட்ஹாம், லண்டன், ஷீலு, திரு. அப்பு தாமோதரன், துணை மேயர், க்ரோய்டன், ஷீலு, திரு. சாம் ராபர்ட் - ளீசிநு, இந்திய கூடிளிளீபுசி பொதுச் செயலாளர், திரு. இரா.அன்பழகன் - தலைவர், த.மு.க திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி, லண்டன், திரு. ஜெயினுல் ஆபிதீன், முன்னாள் தலைவர், தமிழ் இஸ்லாமியர் சங்கம், லண்டன், திரு. ஞானமுருகன் - நிறுவனர், இலண்டன் தமிழோசை, திருமதி. புஷ்பகலா வினோத்குமார் - நிறுவனர், ஃபெல் தமிழ்ச் சங்கம், திரு. அப்துல் ஹாதி னிம், பயோாலுமிக்ஸ், ஷீலு, - திரு. முருகேசன் - தமிழ் சமூக ஆர்வலர், திரு. வேலு சிங்காரம் - தலைவர் இந்தியன் பிசினஸ் நெட்வொர்க், திரு. மது முருகன் - குரூப் சேர்மன் லக்ஷ்மி பிராண்ட் லிமிடெட், ஷீலு, திரு. ஜெயபாலன் - செயலாளர் I.B.N, UK, திரு. பூ.ரவிச்சந்திரன் - நேரு நிலையம், கூழி.ளீ.ணூ. லண்டன், திரு. பக்தவச்சலம் E.C. ஆலோசகர், NRTIA லண்டன், மிஸ். வர்ஷா வர்கீஸ், SOAS பல்கலைக்கழகம், லண்டன், திரு. ராஜ்பூபதி, சேர்மன், ஸிபுளீபு, ஷீலு, திரு. சதீஷ் குமார் னிம், இன்சைட் ஹோம்ஸ், ஷீலு, திரு. கிருஷ்ணா கணேஷ், துணைத் தலைவர் ITWA ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பல பிரமுகர்கள் உரையாற்றினர். இந்த நிகழ்வைச் சீரும் சிறப்புமாக ஒருங்கிணைப்பு செய்திருந்த திரு. செந்தில்குமார் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (27 May 2024)









தெற்கு ஹாரோ, லண்டன், யுனைடெட் கிங்டமில் டாக்டர். சுமதியால் நடத்தப்பட்ட சர்வதேச தமிழ்க் கலாச்சார இயக்கத்தின் நிகழ்வில் தமிழ் புலம்பெயர் சமூகத்தினரைச் சந்தித்தது மகிழ்ச்சி அளித்தது. இந்நிகழ்வின் போது, தமிழ்நாடு அரசும், நமது தொலைநோக்குப் பார்வை கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிறுவப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியத்தின் (NRTWB) முக்கியப் பணிகள் குறித்துப் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்தது. ஹியூவீநிய உலகளவில் தமிழர்களின் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைக்க மற்றும் அவர்களின் நலனை ஆதரிக்க நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது குறித்த நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டேன். NRTWB உறுப்பினரான திரு. முஹம்மது ஃபைசல் மற்றும் செல்ம்ஸ்போர்ட் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திரு. வெற்றி ஆகியோருடன் இணைந்து கலந்துரையாடல்களில் பங்கேற்றது எனக்குப் பெருமை அளித்தது. உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த நாங்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். (26 May 2024)







உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
ESTD 1974
United Kingdom
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE (UKIMTC)
25th May 2024
5.00 PM GMT
Thiru Karthikeya Sivasenapathy
Chairman, Non Resident Tamil Welfare Board, Govt of Tamilnadu
Secretary, Environment Wing - Dravida Munnetra Kazhagam
Mr A Ilanchelian Principal Solicitor
Founder Chairman UKIMTC
UK International Movement for Tamil Culture
Prof Kanes Rajah Executive Director Centre for Executive & Professional Development London
Dr Sumathi Luxman
GP North London
Mr Dave Vasoodaven
Managing Partner, Solicitor London
Mr S Poologanathan
Principal GP London
Mr M Thangarajah
Professional Forex Trader
Mr A Wimalathasan
ITP Canadian HC
Mr Regy Gnana-Ratnam
Director Eureka Intl Ltd
Mr T Pirapatharan
Proprietor Praba Restaurant
Mr Sundaram Sri
Sales & Marketing Executive
IBC Media & Events
PRABA Restaurant
262 Northolt Road, South Harrow, HA2 8HF, UK
www.imtcuk.com
+44 750 718 1818
+44 208 488 1491



இங்கிலாந்து நாட்டில் லண்டன் மாநகரில் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக, சமூக ஆர்வலர் திரு. முருகேசன் தலைமையில் தமிழ் மாணவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளுடன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் வாரியம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும், வாரியம் இந்த குறுகிய காலத்தில் வாரியம் செய்த செயல்களையும் எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றியதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். உடன் அயலகத் தமிழர் நல வாரிய ஐரோப்பிய உறுப்பினர் திரு. முகம்மது ஃபைசல் கலந்துகொண்டார். மேலும் திரு. வினோத் பாஸ் வரவேற்புரையாற்றினார். திரு. மைக்கேல் ஜென்னிங்ஸ், கலைமாமணி திவ்ய கஸ்தூரி, வழக்கறிஞர் பிரதாப் கிரி, மற்றும் வழக்கறிஞர் ராமச்சந்திரன் ஆகியோர் தமிழ் மாணவர்கள் மத்தியில் வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி என்றும், பெண்ணியத்தின் கண்ணியம், தன்னிகரில்லா தமிழக முதல்வரின் ஆட்சியில் தழைத்தோங்கிய தமிழகம் என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். லண்டன் ஈஸ்ட்ஹாம் கவுன்சிலர்கள் திருமதி. லக்மினி ஷா, திருமதி. சூசான் மாஸ்டர், திரு. லூயிஸ் கோட்ஃப்ரி, ஆகியோர் கலந்து கொண்டு தமிழர்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்வதாக உறுதி அளித்தார்கள். ஏராளமான தமிழர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் இறுதியில் திரு. குணா முத்துசாமி, பட்டுக்கோட்டை திரு. பிரேம் ஆகியோர் நன்றியுரை வழங்கினர். (24 May 2024)










பணிபுரியும் போது வெளிநாட்டில் மரணம்:

**தமிழக அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர் குடும்பத்துக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி**

**எஸ்.எஸ்.மீரான் தகவல்**

**ரூ.1 லட்சம் நிதியுதவி**

**9 மாதத்துக்குள் விண்ணப்பிக்கலாம்**

## அயலகத் தமிழர்கள் பதிவு செய்ய அழைப்பு

வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் வசிக்கும் தமிழர்கள் அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராக இணையலாம். அயலகத் தமிழர் புகைப்பட அடையாள அட்டைக்கு nrtamils.tn.gov.in இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். வாரிய உறுப்பினர்கள் விபத்து காப்பீடு, கல்வி, திருமண உதவி உள்ளிட்டவற்றை பெறலாம் – தமிழக அரசு. 20 May 2024)



# Non-resident Tamils urged to register

CHENNAI: The State government on Saturday appealed to non-resident Tamils living in other states within India and abroad to register with the Non-Residential Tamils Welfare Board to avail benefits of the schemes implemented.

Non-resident Tamils aged 18 to 55 years living abroad or in other states of India could register with the office of the Commissioner of the Department of Welfare of Non-resident Tamils on their website (https://nrtamils.tn.gov.in). People can become members of the board by paying a one-time registration fee of Rs 200. The identity needs to be renewed every three years.

Tamils working/studying abroad with an Indian passport and appropriate documents and Tamils intending to go abroad after obtaining emigration clearance are eligible for membership in this category. Tamils residing in any other state of India for more than six months are eligible for membership in this category, a release issued by the state government said.

To encourage membership registration, the registration fee of Rs 200 has been waived for persons registering within an initial period of three months from May 15. The eligible registered members could avail the benefits of insurance, personal accident insurance, critical illness insurance covering a wide range of ailments, educational assistance and marriage aid.

The government has encouraged interested persons to reach out to the department through the helplines and pre-departure orientation training centres besides the toll-free helpline numbers 18003093793 (within India), 8069009901 (outside India) and 8069009900 (missed call number) for additional inquiries.



# Registration for non-resident Tamils waived for 3 months

TIMES NEWS NETWORK

**The commissioner said chief minister M K Stalin directed the department to set up the board after migration of Tamils to foreign countries and other states**

Chennai: The department of welfare of non-resident Tamils, which established Non-resident Tamils' welfare board and invited non-resident Tamil people aged between 18 and 55 years living abroad or in other states of India to register themselves as members on the website *https://nrtamils.tn.gov.in* has waived off the registration fee of ₹200 for an initial period of three months from May 15 to August 15 this year.

Commissioner (department of welfare of non-resident Tamils) in a statement on Saturday said the board registers members under two categories – non-resident Tamil living abroad and non-resident Tamil living in other states in India. "Tamils working/studying abroad with an Indian passport and appropriate documents and Tamils intending to go abroad after obtaining emigration clearance are eligible for membership under non-resident Tamils living abroad category while Tamils residing in any other states of India apart from Tamil Nadu for more than six months are eligible for membership under the other category," said the release.

The commissioner said chief minister M K Stalin directed the department to set up the board after migration of Tamils to foreign countries and other states of India recently increased for reasons such as employment, education and business among others and to ensure protection of their welfare.

He said the board extends several welfare schemes including insurance coverage - personal accident insurance and critical illness insurance, educational assistance, and marriage assistance. He said the department has set up a round-the-clock toll-free helpline – 18003093793 (within India), 8069009901 (outside India) and 8069009900 (missed Call) to assist non-resident Tamil people.

He said the department also established pre-departure orientation training centres at the collectorate offices in seven districts – Thanjavur, Ramanathapuram, Perambalur, Kanyakumari, Sivagangai, Villupuram and Pudukottai – in the state to ensure safe, legal and proper migration to foreign countries.



## பண்பாட்டுப் பயணம் மற்றும் சமூக நீதி

91. தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், 'வேர்களைத் தேடி' என்ற திட்டத்தின் கீழ், தென் ஆப்பிரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேசியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து 100 அயல் தமிழ் இளைஞர்கள், தமிழகத்தின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை நேரில் கண்டறியும் வகையில், 1.08.2024 முதல் 15.08.2024 வரை 15 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர். இந்த திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சிறப்பான தொடக்கம் கொடுத்துள்ளார். பயணத்திற்குத் தேவையான துணிமணிகள், பயணக் குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பொருட்களை இளைஞர்களுக்கு வழங்கி, அவர்களுடன் குழுப்படம் எடுத்துக்கொண்டார். இந்த திட்டம் தமிழகத்தின் கலாச்சாரத்தை உலகிற்கு பறைசாற்றும் ஒரு முக்கியமான முயற்சியாகும். (01 August 2024)




அமெரிக்காவின் அட்லாண்டாவில் வாழக்கூடிய தமிழ் மக்கள் கடந்த 10 ஆண்டுகளாக பூமி தினக் கொண்டாட்டங்களை தொடர்ந்து கொண்டாடி வருகிறார்கள். அங்கு தமிழ் மக்கள் ஒன்று கூடி மரக் கன்றுகளை வளர்த்து விற்பனை செய்வது மட்டுமன்றி, பல்வேறு பொருட்களை செய்து கொண்டு வந்து அங்கே விற்று, அதன் மூலம் வரக்கூடிய தொகையை வைத்து தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய நீர் ஆதாரங்களைப் பெருக்கவும், சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாக்கவும் குளங்குட்டைகளை தூர்வார அந்தப் பணத்தை நன்கொடையாக கொடுத்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது.

இந்த வருடம் பூமி தினம் (Earth Day) நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. 18000 கிலோமீட்டர் தொலைவில் இருந்தாலும் தமிழ் மண்ணையும்,



தமிழ் மக்கள் மீதும் அளவற்ற அன்பும், பாசமும், நேசமும் கொண்ட தமிழ் உறவுகள் கொண்டுள்ள கடமை உணர்ச்சியை நினைக்கும் பொழுது பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. தமிழ்நாடு அரசும், அயலகத் தமிழர் நல வாரியமும் அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்பதையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கிய அயலகத் தமிழர் நல



வாரியத் துறையைப் பற்றியும், துறையின் செயல்பாடுகளைப் பற்றியும் குறிப்பாக அமெரிக்காவில் இருந்து மீட்கப்பட்ட குழந்தை பற்றிய செய்தியைப் பலர் பாராட்டி வாழ்த்துக்களை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தெரிவித்தார்கள். இதனை முதல்வர் இடத்திலே எடுத்துச் சென்று முதல்வருக்கு தெரிவிப்பதாக உறுதி அளித்திருக்கின்றேன். தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரியமும் என்றென்றும் உலக வாழ் தமிழர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதையும் கூறி இருக்கின்றேன். மீண்டும் ஒருமுறை இந்த அருமையான நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த, மிக முக்கியமாக இந்த நிகழ்வினை தொடங்கியது நான்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு அன்பு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (02 May 2024)



அமெரிக்க நாட்டில் ஜார்ஜியா மாகாணத்தில் மிகச் சிறப்புற தமிழ்ப் பள்ளியை உருவாக்கி அந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பல வருடங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய திரு. ரவி பழனியப்பன் அவர்களின் முயற்சியால் அமெரிக்காவில் முதல் முறையாக பல வருடங்களுக்கு முன்பே தமிழ்ப் பள்ளியில் கற்றவர்களுக்கு ஐந்து விழுக்காடு ஒதுக்கீடு (Credit Points) பல்கலைக்கழகத்திற்கு செல்லும் பொழுது கிடைக்கும் படி செய்தது மிகப்பெரிய சாதனை. அந்தப் பள்ளியின் 25 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. நெப்போலியன் துரைசாமி, அட்லாண்டாவில் இருக்கக்கூடிய தூதரக அதிகாரி திரு. ரமேஷ் பாபு லட்சுமணன் ஐ.எஃப்.எஸ், பல்வேறு சாதனைகளை செய்த தொழில் முனைவர் திரு. சித்து அகமது அவர்களுடன் கலந்து கொண்டதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். உலகத்திலே எங்கே வாழ்ந்தாலும் தாய் மொழியான தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் என்ற முயற்சியில் செயலாற்றக் கூடிய எண்ணற்ற தமிழர்களின் முயற்சியின் ஒரு எடுத்துக்காட்டு இப்பெருமைமிகு பள்ளியின் நிகழ்வுகளில் கலந்து கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (30 April 2024)




LILBURN TAMIL SCHOOL
இலில்பர்ன் தமிழ்ப்பள்ளி
LTS
இலில்பர்ன் தமிழ்ப்பள்ளி
LILBURN TAMIL SCHOOL
LTS is a 501(C) (3) Nonprofit Organization
25TH ANNIVERSARY
APRIL 27
1- 6 PM
DULUTH HIGH SCHOOL AUDITORIUM
இலில்பர்ன் தமிழ்ப்பள்ளியின் 25-ஆம் ஆண்டு விழாவிற்கு உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.
You are cordially invited to join us in remembering a significant milestone in our educational journey - the 25th anniversary of Lilburn Tamil School. It is with great pride and joy that we mark this occasion and extend our warmest invitation to you.
PROGRAM SCHEDULE
LIGHTING OF LAMP
ANTHEMS (TAMIL/USA)
WELCOME ADDRESS
CULTURAL
GUEST SPEECHES
GRADUATION
CHIEF GUESTS
THIRU NEPOLEON DURAISAMY
Former Minister of State Social Justice & Empowerment
THIRU RAMESH BABU LAKSHMANAN
Consul General of India Atlanta
THIRU KARTHIKEYA SIVASENAPATHY
Chairman
NRT Welfare Board, Tamilnadu, India
THIRU SIDD AHMED
President & CEO
VDart Group







அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்தின் தலைநகரான அட்லாண்டா தூதரகத்தில் இந்திய தூதரக அதிகாரி திரு. ரமேஷ் பாபு லட்சுமணன் அவர்களை சந்தித்து அமெரிக்காவில் தவித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டைச் சார்ந்த குழந்தை பிரவீன், மற்றும் அந்த குழந்தையின் சித்தி, பாட்டி ஆகியோரை இரண்டு வருட காலமாக பல முயற்சிக்கு பின் குழந்தையுடன் தமிழ்நாட்டுக்கு வரவழைத்ததற்கு அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகவும், தமிழ்நாட்டு அரசின் சார்பாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாகவும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்திய தூதரகம் பல்வேறு முயற்சி எடுத்து இந்தக் குழந்தையை மீட்டு வருவதற்குப் பாடுபட்ட முன்னாள் தூதரக அதிகாரி திருமதி. சுஜாதா குல்கர்னி ஐ.எஃப்.எஸ் அவர்களுக்கும், இன்றைய கவுன்சில் ஜெனரல் ஆப் இந்தியா திரு. ரமேஷ் பாபு லட்சுமணன் அவர்களுக்கும், திருமதி. மினி நாயர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல அமெரிக்க அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் கால்டுவேல் வேல்நம்பி, ஃபெட்னா திரு. பாலா சுவாமிநாதன், ரியாக்ஷன் டீம் திருமதி. வழக்கறிஞர் நிலா, திரு. பாலாஜி, திருமதி. கவிதா பாலாஜி ஆகிய அனைவருக்கும் மறுபடியும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (29 April 2024)





அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணத்தில் பெற்றோரை இழந்து தவித்த தமிழ்நாடு உசிலம்பட்டியைச் சேர்ந்த இரண்டு வயதுக் குழந்தை விஸ்ருத், உறவினர்களிடம் ஒப்படைக்க எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றது. மே இரண்டாம் தேதி 2022 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வசித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி. தமிழ்ச் செல்வி மற்றும் திரு. பிரவீன்குமார் ஆகியோர் தங்களது இரண்டு வயதுக் குழந்தை 'விஸ்ருத்தை' விட்டு விட்டு தற்கொலை செய்து கொண்டனர். அருகாமையில் வசித்த ஒருவர் இறந்தவர்களின் உடலை இந்தியாவிற்கு அனுப்புவதற்காகப் பொது அதிகார ஆவணம் பெற்றிருந்தார். அதனைப் பயன்படுத்தி அக்குழந்தையைத் தமிழ்நாட்டில் வசிக்கும் உறவினர்களது சம்மதம் இல்லாமல் வேறொருவருக்குத் தத்து கொடுத்து விட்டார்.

இந்தச் சூழ்நிலையில் குழந்தையின் அம்மா வழிப் பாட்டியும், சித்தி செல்வி அபிநயா முருகன் ஆகியோர் அமெரிக்கா சென்று குழந்தையை மீட்டெடுத்து தமிழ்நாட்டுக்குக் கூட்டி வரச் சட்ட போராட்டத்தைத் தொடங்கினர். அப்போது தமிழ்நாடு அரசைத் தொடர்பு கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியத்தின் உதவியை நாடினர். இதனை அறிந்த மாண்புமிகு முதல்வர், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவரான என்னை அமெரிக்கா சென்று இப்பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காண உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் (2023ஆம் வருடம்) அமெரிக்கா சென்று மிசிசிப்பி நகரத்தில் இந்தியத் தூதரக அதிகாரிகள், அந்தக் குழந்தையின் சித்தி, பாட்டி, தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், அமெரிக்காவிற்கான அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் திரு. கால்டுவெல் வேல்நம்பி, FETNA திரு. பாலா சுவாமிநாதன் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தி, மிசிசிப்பி மாநில ஆளுநர் திரு. டேட் ரிவிஸ், அட்டர்னி ஜெனரல் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகக் குழந்தையை உறவினர்களிடம் ஒப்படைக்கக் கடிதம் அனுப்பப்பட்டது.

பல்வேறு சட்ட போராட்டங்களைத் தாண்டி இன்று குழந்தை அவருடைய சித்தி மற்றும் பாட்டியுடன் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைநோக்கு பார்வையில் உருவான அயலகத் தமிழர் நல வாரியம் இதுபோன்ற குரலற்றவரின் குரலாக இருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது. மாண்புமிகு முதல்வர், துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், அட்லாண்டாவில் இருக்கக் கூடிய இந்திய நாட்டுத் தூதர் அவர்களுக்கும், அமெரிக்காவில் பணிபுரியக் கூடிய வழக்கறிஞர் திரு. பாலாஜி, திருமதி. கவிதா, திருமதி. ரோகிணி, திருமதி. லாவண்யா, வழக்கறிஞர் செல்வி நிலா, இந்தியத் தூதரக அதிகாரி மினி நாயர், திரு. குமார் நல்லுசாமி, திருமதி. சுவாதி குல்கர்னி IFS, மற்றும் ரியாகூஷன் டீம் ஆகியோருக்கு அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (03 April 2024)










வரலாற்று ரீதியாக, தமிழர்கள் வர்த்தகம், பயணங்கள் மற்றும் குடியேறுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். ஏராளமான தமிழர்கள் பொருளாதார காரணங்களுக்காகவும், உலகமயமாக்கல் காரணமாகவும் வேலைவாய்ப்பைத் தேடி வெளிநாடுகளுக்கு குடிபெயர்கின்றனர். புலம்பெயர் தமிழர்கள் அனைவரின் நலனையும் உறுதி செய்வதற்காக மாநில அரசு ஒரு ஆணையரகம் (Commissionerates) உருவாக்கியுள்ளது. (March 2024)



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் டல்லாஸ் நகரில் வசிக்கும் திரு. வேலு ராமன் திருமதி. விசாலாட்சி தம்பதியர் ஆரவாரமில்லாமல் கடந்த 17 வருடங்களாக செம்மார்ந்த தமிழ்ப் பணி செய்து வருகிறார்கள். இந்த வருடம் இவர்களது சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் 17வது ஒரு குறள் ஒரு டாலர் போட்டியில் பங்கேற்ற இரண்டு மாணவ, மாணவிகள் புதிய சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவில் டல்லாஸ் நகரில் 17 ஆண்டுகளுக்கு முன்னதாக சாஸ்தா தமிழ் அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட 'ஒரு குறள் ஒரு டாலர்' போட்டியின் வழியே அமெரிக்கா முழுவதும் பரவலாக நடைபெற்று வரும் திருக்குறள் போட்டிகளில் இளம் தலைமுறையினர் தொடர்ந்து சாதனைகள் பல படைத்து வருகின்றனர். இந்தப் போட்டிகள் மூலம் தமிழ்நாடு உட்பட உலகம் முழுவதும் திருக்குறள் மீது புதிய ஆர்வமும் எழுச்சியும் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய தமிழ்த் தொண்டினைக் கடந்த பதினேழு வருடங்களாக அமெரிக்கா நாட்டில் பல்வேறு இடங்களில் நடத்திவந்த வெளிநாடு வாழ் தமிழ் குழந்தைகளுக்குத் தமிழை, திருக்குறளை அவர்கள் வாழ்வின் ஒரு அங்கமாக மாற்றச் செய்து வருகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் அயலகத் தமிழர் நல அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களுடன் இணைந்து அயலகத் தமிழர் நலவாரியத்தின் சார்பாக இத்தகைய திருக்குறள் போட்டிகளுக்கு ஊக்கமளித்து உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வாழ்வில் திருக்குறள் ஒரு அங்கமாக மாறுவதற்கும், உறுதுணையாக உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதையும் மரியாதைக்குரிய வேலுராமன், விசாலாட்சி தம்பதியருக்கு எனது அன்பும் வாழ்த்துக்களும்.





## அயலகத் தமிழர்களுக்கான காவல் துறை சிறப்புப் பிரிவு

அயலகத் தமிழர் நல வாரியத்திற்கென காவல்துறை சிறப்புப் பிரிவை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கென சிறப்பான காவல் துறை அதிகாரிகளும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் உள்ளனர். வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழக்கூடிய தமிழர்களுடைய பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் சென்னை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் அயலகத் தமிழர்களுக்கென அதிகாரிகள் இருக்கின்றார்கள். வெளிநாட்டுக்கு பணிக்குச் செல்பவர்கள், வெளிநாடுகளில் வாழக்கூடியவர்கள் அவர்களுடைய சட்ட ரீதியான அனைத்து பிரச்சனைகளுக்கும் இணைய தளத்தின் வாயிலாகத் தொடர்புகொண்டு தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியும். அயலகத் தமிழர் தின நிகழ்வில் திருமதி. சண்முகப்பிரியா இ.கா.ப அவர்கள் காவல்துறையின் பல்வேறு திட்டங்களைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். உள்துறைச் செயலாளர் திருமதி. அமுதா இ.ஆ.ப அவர்களும் உடனிருந்து விழாவைச் சிறப்பித்தார்கள். (21 January 2024)











புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நலனுக்காக, 2011-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் நாள் கலைஞர் அரசால் ’வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம்’ இயற்றப்பட்டது. இருப்பினும், ஆட்சி மாற்றத்தால் ‘புலம்பெயர் தமிழர் நலவாரியம்‘ அமைக்கும் திட்டம் முந்தைய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, மார்ச் 2021-ல் DMKNRIwing ஏற்பாடு செய்த ஜூம் கூட்டத்தில், REACTION-Response Emergency Access & Care To Indian Overseas Network Team Inc சார்பாகவும், எனது சார்பாகவும், புலம்பெயர் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தொடர்பு புள்ளி (point of contact) இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது பல அயலகத் தமிழர்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்தது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த டிசம்பர் மாதம் ’வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்’ அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இதன் தொடர்ச்சியாக, புலம்பெயர் தமிழர் நல வாரியத்தின் தலைவராக கார்த்திகேய சிவசேனாபதி அவர்களும், Non Resident Tamil Indians Association USA அரசு சாரா உறுப்பினராக கால்டுவெல் வேல்நம்பி அவர்களும் நியமிக்கப்பட்டனர். சமீபத்தில் மிசிசிப்பியில் நடைபெற்ற நிகழ்வில் இவர்கள் இருவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அக்கூட்டத்தில், India In USA (Consulate General of India, Atlanta) மற்றும் Mid South Tamil Sangam முன்னிலையில் REACTION அமைப்பைப் பற்றிய ஒரு விளக்கத்தை லாவண்யா அழகேசன் வழங்கினார். எங்களைப் போன்ற பலரின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து வாரியம் அமைத்த தமிழக முதல்வருக்கு மனமார்ந்த நன்றிகள்.





## நார்வேயில் பொங்கல் கொண்டாட்டம்

நார்வேயில் உள்ள தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் பனிப்பொழிவை எதிர்கொண்டு மிகுந்த உற்சாகத்துடன் பொங்கல் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர். -10°C வெப்பநிலை மற்றும் பனிப்புயல் போன்ற சவால்கள் இருந்தபோதிலும், பாரம்பரியத்தின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு உண்மையிலேயே பாராட்டத்தக்கது. பொங்கல் கொண்டாட்டங்களில் கலந்துகொண்ட இந்தியத் தூதர் மற்றும் உள்ளூர் மேயருக்கு சிறப்பு நன்றி.

பாரம்பரிய வாழை இலையில் மதிய உணவு பரிமாறப்பட்டது போன்ற கலாச்சாரப் பரிமாற்றம் குறித்து அறிந்துகொள்வது மனதிற்கு இதமாக இருந்தது. நார்வேஜியர்களை கைகளால் சாப்பிட ஊக்குவிப்பது போன்ற உங்கள் முயற்சிகள், நமது பழக்கவழக்கங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் புரிதலையும் மகிழ்ச்சியையும் வளர்க்க உதவுகின்றன. இந்த கொண்டாட்டம் நார்வேயில் உள்ள நமது சமூகத்தின் பிணைப்புகளை வலுப்படுத்தட்டும். (07 August 2024)







## அயலகத் தமிழர் தினம் 2024: ஒரு மாபெரும் கொண்டாட்டம்

அயலகத் தமிழர் தினம் 2024 மிகச் சிறப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. சிங்கப்பூரின் மாண்புமிகு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. கா. சண்முகம் அவர்கள் தலைமை விருந்தினராகவும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவராக நானும் முன்னிலை வகித்தோம். மேலும் மலேசியா சட்டம் & நிர்வாக சீர்திருத்தத்துறை மாண்புமிகு துணை அமைச்சர், திரு. எம். குலசேகரன், மாண்புமிகு கிழக்கு மாகாண ஆளுநர், இலங்கை மற்றும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எம். செந்தில் தொண்டமான், மொரிஷியஸ் நாட்டின் முன்னாள் அதிபர், டாக்டர். பரமசிவம் பிள்ளை வையாபுரி,

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு .செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டின் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு ஸ்ரீ. சுப்ரமணியன் சதாசிவம், கனடா, ஒன்டாரியோ, மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு லோகன் கணபதி, ஆஸ்திரேலியா ரிவர்டன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். இரவீந்திரன், இங்கிலாந்து மேயர்,அமஸ்பரி திருமதி. சாருலதா மோனிகா தேவேந்திரன், தென் ஆப்பிரிக்கா துணை மேயர், டர்பன், திரு. லோகி நாயுடு முன்னாள், அமெரிக்கா ஜூம் நிறுவனம், திரு. வேல்சாமி சங்கரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

அதுமட்டுமின்றி, உலக வாழ் தமிழ் மக்களில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டுமின்றி, உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்களுடைய சிறப்புகளை கண்டறிந்து அவர்களுக்கு விருதுகள் வழங்குவது முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய சிந்தனையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு திருமதி. வைதேகி கல்போட் அவர்களுடைய சங்க இலக்கியத் தொகுப்புகளை மொழிபெயர்த்த புத்தகங்கள் தான் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை உருவானதற்கு உந்துகோலாய் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல டாக்டர். சுதாகர் பிச்சைமுத்து என்பவர் ஸ்காட்லாந்து நாட்டில் விஞ்ஞானியாகப் பணிபுரிந்தவர். அவரை கௌரவிப்பதிலும் அயலகத் தமிழர் நல வாரிய அமைச்சகமும், வாரியமும் பெருமைப்படுகிறது. அதுபோல டல்லாஸ் நகரத்திலே டெக்சாஸ் மாகாணத்தில் வாழக்கூடிய திருமதி. சித்ரா மகேஷ் அவர்கள் கடந்த 2000 வருடங்களில் முதல் முறையாக ஒரு பெண் முழு திருக்குறளுக்கு உரை எழுதிய சாதனையையும் செய்திருக்கின்றார்கள். அவர்களையும் தமிழ்நாடு அரசு கௌரவித்து இருக்கின்றது. இப்படி பல்வேறு சாதனையாளர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது:



★ அமெரிக்கா திரு. பால சண்முகம் ராஜமாணிக்கம் - தொழில் மற்றும் மேலாண்மைப் பிரிவு
★ மலேஷியா திரு. சையது முகமது சலாவுதீன் - தொழில் மற்றும் மேலாண்மை
★ யுனைடெட் கிங்டம் (யுகே) - டாக்டர் சுதாகர் பிச்சைமுத்து - அறிவியல் & தொழில்நுட்பம்
★ சிங்கப்பூர் திரு. சுப்பிரமணியன் திண்ணப்பன் - தமிழ் இலக்கியம்
★ அமெரிக்கா திருமதி. வைதேகி ஹெர்பர்ட் - தமிழ் இலக்கியம்
★ சிங்கப்பூர் - திரு. ஜெயராம் லிங்கம நாய்க்கர் - மருத்துவம்
★ அமெரிக்கா திரு. பாலா சுவாமிநாதன் - கல்வி
★ ஆஸ்திரேலியா திரு. முருகேசு பரமநாதன் - கல்வி
★ மலேசியா திரு. ஒய்.பி. டத்தோஸ்ரீ எம்.சரவணன் - சமூக வளர்ச்சி
★ அமெரிக்கா திரு. சோமசுந்தரம் இளங்கோவன் - சமூக வளர்ச்சி
★ ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திருமதி. ஜசீலா பானு
★ தென் கொரியா திரு. ராமன் குருசாமி - விளையாட்டு
★ குவைத் திருமதி. டி.கே. சரண்யா தேவி - விளையாட்டு

ஆகியோரை பெருமைப் படுத்தியதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். (14 January 2024)








அமெரிக்க அதிபரிடம் விருது பெற்ற திருமதி. வைதேகி ஹெர்பர்ட் அம்மா அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார். (13 January 2024)

---

பல்லாயிரம் வருட தமிழ் சமூகத்தில் திருக்குறளின் முப்பாலுக்கும் உரை எழுதிய முதல் பெண் என்பதில் தமிழ்நாடு அரசின் 'கணியன் பூங்குன்றனார்' விருது சித்ரா மகேஷ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (13 January 2024)






---

அயலகத் தமிழர் விழா-2024: நம் தமிழ்நாடு அரசு இன்று முன்னெடுக்கும் அயலகத் தமிழர் தின விழாவினில் எனது தமிழ் வெல்லும் எனும் சிறப்பு நடன நிகழ்வு உள்ளது. அயலகங்களில் இருந்து தமிழகம் வந்திருக்கும் அனைத்து அன்பு நெஞ்சங்களையும் வருக வருக என வரவேற்கின்றேன். எனது நிகழ்வு இன்று மாலை 6.45 மணிக்கு நந்தம்பாக்கம் வர்த்தக மைய அரங்கினில். (13 January 2024)





உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ச் சமூகத்திற்கு பங்களிப்புகள் மற்றும் சாதனைகளை சிறப்பிப்பதற்கும், அங்கீகரிக்கவும் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கொண்டாடப்படும் இந்த நிகழ்வு, தமிழர் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபுகளை வெளிப்படுத்தும் ஒரு களமாக செயல்படுகிறது. இந்த விழாவில் பொதுவாக கலாச்சார நிகழ்ச்சிகள், கலை, இலக்கியம், பகுத்தறிவு, பொருளாதாரம், வரலாறு ஆகிய கலந்துரையாடல்கள் மற்றும் உலகளாவிய தமிழ் சமூகத்தை ஒன்றிணைத்து அவர்களின் அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டாடும் நிகழ்வுகளை உள்ளடக்கியது. (12 January 2024)












இன்று (11.01.2024) சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் திரு.க. நந்தகுமார், இ.ஆ.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் திரு. பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இன்று (11.01.2024) சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2024 விழாவில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினைத் திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம்.அப்துல்லா, அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி, பொதுத் துறை செயலாளர் திரு.க. நந்தகுமார், இ.ஆ.ப., அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் திரு. பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




வேர்களைத் தேடி
01 ஆகஸ்ட் 2025 முதல்
15 ஆகஸ்ட் 2025 வரை
தமிழ்நாட்டிலிருந்து இரண்டு தலைமுறைக்கு முன்னால் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாரிசுகள் தமிழ்மொழி, தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கட்டிடக்கலை, தற்காலச் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள தமிழ்நாட்டில் ஒரு பண்பாட்டுப் பயணம்!
• 15 நாட்கள்
• 20-க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டின் தொன்மைவாய்ந்த இடங்கள்
• பயிற்சி பட்டறைகள்
• கலை நிகழ்ச்சிகள்
புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இளம்பிள்ளைகள், அயலகத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த இளம் மாணவர்கள், முழு விவரங்கள் அறிய & விண்ணப்பிக்க
nrtamils.tn.gov.in/portal/ryr

## வட அமெரிக்கத் தமிழ்ப் பேரவையின் 38வது கூட்டம்

வட அமெரிக்கத் தமிழ்ப் பேரவையின் 38-வது கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்தின் சார்பாகக் கலந்துகொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் உரையாற்றியதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த தமிழர்களைச் சந்தித்து, அவர்களுடைய தேவைகளைத் தெரிந்து கொண்டதுடன், தமிழக அரசு வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக செய்துள்ள பணிகளை பற்றி எடுத்துரைத்தேன்.

குறிப்பாக, இரண்டு நிகழ்வுகளில் சமூக நீதி, தமிழ்நாட்டின் முன்னேற்றம், இன்னும் சொல்லப்போனால், சிற்றூர்களில், கிராமங்களில் இருந்து வெளிநாட்டிற்குச் சென்று பெரும் முன்னேற்றங்களை அடைந்திருப்பதற்கான காரணங்கள் எல்லாவற்றையும் பற்றி உரையாற்றியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அயலகத் தமிழர் நல வாரியத்தின் வட அமெரிக்க உறுப்பினர் திரு. கால்டுவெல் வேல்நம்பி, புலவர் திரு. செந்தலை கவுதமன் அவர்கள், திரு. நக்கீரன் கோபால் அவர்கள், ாணுாவீ பல்கலைக்கழத்தின் வேந்தர் ஐயா திரு. விஸ்வநாதன் அவர்கள் போன்றோருடன் இந் நிகழ்வில் கலந்துகொண்டது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தங்களது மரபுகளையும், மண்ணையும், மொழியையும், கலாச்சாரத்தையும் விட்டுக்கொடுக்காமல் வாழ்வதைப் பார்க்கும்போது, குறைந்தபட்சம் 4500 வருடங்கள் இந்த இனத்திற்கு இருக்கக்கூடிய வரலாற்றைக் கொண்டாடக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகவே இதனைப் பார்க்கிறோம். தமிழ்ச் சமூகம் மேலும் மேலும் கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு முன்னேற்றங்களை அடைந்து நலமுடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். (08 July 2025)







FiST
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப்
பேரவையின்
38ஆவது தமிழ் விழா
JULY
03, 04 & 05
2025
Thursday, Friday & Saturday
RALEIGH CONVENTION CENTER
500 South Salisbury St
Raleigh, NC 27601
2025
சிறப்பு
நிகழ்ச்சிகள்
தொழில் முனைவோர் மாநாடு
சர்வதேச திரைப்பட விழா
சர்வதேச விளையாட்டு போட்டிகள்
தமிழிசை | துள்ளிசை
இன்னிசை இரவு
மக்களிசை
கலை இலக்கியப் போட்டிகள்
நாடகம் | நாட்டியம்
கவியரங்கம்
மரபுக்கலைகள்
அறிவரங்கம்
விவாதமேடை
நவீன நிகழ்ச்சிகள்
இலக்கிய விநாடி வினா
திரைக்கலைஞர் நேரம்
அறிவியல் தேனீ
சங்கங்களின் சங்கமம்
நகைச்சுவை நேரம்
மணமாலை
இன்னும் பல...
www.fetna-convention.org
REGISTER NOW



**உலகத் தமிழ் அறிஞர்களுக்கு அழைப்பு: அறிவுசார் மறுமலர்ச்சிக்கு கைகொடுங்கள்**

தமிழ்நாடு உலகத் தமிழ் அறிஞர்களை அறிவுசார் மறுமலர்ச்சியில் இணைய அழைக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன், தமிழ்நாடு அரசு உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கி வருகிறது மேலும் அதில் நீங்கள் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறது!

நீங்கள் வெளிநாட்டில் வசிக்கும் தமிழ்ப் பூர்வீக ஆராய்ச்சியாளர், விஞ்ஞானி, கல்வியாளர் அல்லது கொள்கை நிபுணர் என்றால், இது உங்களுக்கான வாய்ப்பு:

- ★ தமிழ்நாட்டில் கற்பிக்க அல்லது வழிகாட்ட
- ★ ஆய்வுகளுக்குத் தலைமை தாங்க அல்லது ஆதரிக்க
- ★ பொதுக் கொள்கைகளில் ஒத்துழைக்க
- ★ உங்கள் வேர்களுடன் மீண்டும் இணைய
- ★ தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களின் எதிர்காலத்தை வடிவமைக்க உதவ

இது உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்களை, நமது மாநிலத்தின் சிறந்த கல்வி எதிர்காலத்தை உருவாக்க எங்களுடன் இணைய ஒரு மனமார்ந்த அழைப்பு' என்று அயலகத் தமிழர் நல வாரியத்தின் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் கூறுகிறார்.

உங்கள் சுயவிவரத்தை nrtwb.chairman@gmail.com க்கு அனுப்பவும்.

தமிழ் திறமைகளுக்கான வடிவம்:

- ★ பெயர்
- ★ தகுதி
- ★ பதவி
- ★ நிறுவனம்
- ★ நாடு
- ★ நிபுணத்துவத் துறை
- ★ வசதியான காலம் (மாதம்/ஆண்டு)
- ★ தொடர்புத் தகவல்
- ★ விருதுகள்/பதிப்பகங்கள்/கூட்டணிகள்

உலகளாவிய அறிவை உள்ளூர் முன்னேற்றத்துடன் இணைப்போம்.
(26 June 2024)





## குவைத் திமுக அயலக அணி மற்றும் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் நடத்திய விழா

குவைத் தி.மு.க. அயலக அணி மற்றும் குவைத் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் இணைந்து நடத்திய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு - 2025 நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குவைத் தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் திரு. சிதம்பரம் ந. தியாகராஜன் அவர்கள் தலைமை தாங்கிய இந்த நிகழ்வின் சிறப்பான அமைப்பையும், ஒழுங்கமைப்பையும் வெற்றிகரமாக முன்னெடுத்து நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை செய்தவர்கள், முத்துப்பேட்டை ம. சபரிவாசன் (துணைச் செயலாளர், அயலக தி.மு.க. குவைத்) மற்றும் முத்துப்பேட்டை சந்தியா சபரிவாசன் (மகளிர் அணி, அயலக தி.மு.க. குவைத்) என்பவர்களாவர்.

மேலும், இந்நிகழ்வில் ஆயங்குடி ஜா. சையது முஸ்தபா (இணைச் செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), குடந்தை சி. தியாகராஜன் (இணைச் செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), உளுந்தூர்பேட்டை மு. நஜீர் அகமது (துணைச் செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), திருவடாத்தனூர் ஏ.எஸ். முகமது ரபீக் (துணைப் பொருளாளர், அயலக தி.மு.க. குவைத்), மேட்டுவிளை ஐ. ஜானவாஸ் (தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), தஞ்சை சாந்தி பாலசுப்பிரமணியன் (மகளிர் அணி செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), திருக்கோவிலூர் அ. பொன்முடி (பொறியாளர் அணி செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), சுத்தாநம்தூர் பு. ஷாகுல் ஹமீது (தொழிலாளர் நல அணி செயலாளர்), திருச்சி பு.மூ.னி. இஷாக் ஜக்கரியா (ஓட்டுநர் நல அணி செயலாளர், அயலக தி.மு.க. குவைத்), தக்கலை



ஜோசப் பெர்லின் (சுற்றுச்சூழல் அணி செயலாளர், அயலக தி.மு.க. குவைத்) ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய திரு. போஸ் வெங்கட் (நடிகர், இயக்குனர், தலைமை கழக பேச்சாளர்), திரு. பரிதிஇளம்சுருதி (துணைச் செயலாளர், தி.மு.கழக அயலக அணி), முனைவர் எஸ்.எம். ஹைதர் அலி (தொழிலதிபர், நிறுவனர் M.A Hyder Groups - ட்ராவல்ஸ், கார்கோ மற்றும் உம்ரா சர்வீசஸ்) ஆகியோரை சந்தித்து உரையாடியதும், அவர்களுடன் மேடையில் உரையாற்றியதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

மேலும், இந்த நிகழ்வில் 2025ஆம் ஆண்டுக்கான சீர்மிகு விருது பெறும் குவைத் வாழ் திராவிட வேர்களும் விழுதுகளும் பாராட்டப்பட்டனர்.

- ★ 'பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் விருது' – குடந்தை ஆர். முருகன்
- ★ 'படைப்பிலக்கிய பேராசான் பேரறிஞர் அண்ணா விருது' – சேகரை வெ. செல்லதுரை
- ★ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் விருது' – புதுவை அ. அறிவுமணி
- ★ இனமானக் காவலர் பேராசிரியர் விருது' – விழுப்புரம் ஐ. ஜஹாங்கீர்
- ★ திராவிட நாயகன் தளபதி விருது' – தானிப்பாடி சே. அஷ்ரப் அலி

★ தாய்மொழி தமிழாம் செம்மொழி விருது' - திருவாரூர் ச. குமார்



விருது பெற்ற அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துரை வழங்கிய விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் அயலக தி.மு.க. குவைத் பரங்கிப்பேட்டை மு. நசுருதீன் அகமது, தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அயலக தி.மு.க. குவைத் திருபுவனம் ஹா. மொய்தீன் பாட்ஷா, மகளிர் அணி துணைச் செயலாளர் அயலக தி.மு.க. குவைத் மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, மகளிர் அணி துணைச் செயலாளர் அயலக தி.மு.க. குவைத் திருவாரூர் கனிமொழி கார்த்திகேயன் ஆகியோருக்கும் எனது வாழ்த்துகள்.

'உரை வீசும் திராவிட விழுதுகள்' என்ற பகுதியில் 'என் உயிரினும் மேலான' என்ற தலைப்பில் உரையாற்றிய வலங்கைமான் ரித்திஷ் கலியமூர்த்தி, திராவிட மாடலின் 'நாங்கள் போற்றும் நான்காண்டு சாதனைகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய வலங்கைமான் ஹேமவர்ஷினி கலியமூர்த்தி, மற்றும் 'கலைஞர் தாத்தா' என்ற தலைப்பில் உரையாற்றிய முத்துப்பேட்டை சூரியதேவன் சபரிவாசன் ஆகியோருக்கும் எனது வாழ்த்துகள்.

மேலும், நிகழ்வில் பரதநாட்டியம் அரங்கேற்றிய செல்வி. லீனாஸ்ரீ சதீஷ், செல்வி. சாருமதி குமரேசன், செல்வி. மதுமதி குமரேசன் ஆகியோருக்கும், நன்றி உரை வழங்கிய இளைஞரணி செயலாளர் அயலக தி.மு.க. குவைத் உளுந்தூர்பேட்டை எஸ். வெங்கடேசன் அவர்களுக்கும் எனது அன்பும் நன்றியும்.

மேலும், இளைஞர் அணி துணைச் செயலாளர்களான குடந்தை த. மணிகண்டன், இராதாபுரம் அஜிஜுல்லா, நாராபாகுப்பம் சையத் துராப்ஜான், இலட்சுமங்குடி பி.ஆர். பழனி, விழுப்புரம் எஸ். அம்ஜாத் ஆகியோருக்கும்,

மகளிர் அணி துணைச் செயலாளர் திருமிகு கோவை ரமலத் பானு சையது,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்களான கள்ளக்குறிச்சி மதியழகன், புதுக்கோட்டை அசாருதீன், இராமநாதபுரம் முகம்மது பைசான் அலி (இராமநாதபுரம் பைசான்),

தொண்டரணி துணைச் செயலாளர்களான விழுப்புரம் பா. அய்யனார், புதுவயல் ச. செல்வம், கொள்ளிடம் காவேரி செல்வம், உடையார்பாளயம் செந்தில்குமார், ஆயங்குடி சையது ரகுமான்,

பொறியாளர் அணி துணைச் செயலாளர்களான மருதூர் ம. பிரேம்குமார், அணக்காடு ரோம்லஸ் தேவசகாயம், கன்னியாகுமரி ராஜேஷ், மங்கலம்பேட்டை J. சாஜிதீன்,

தொழிலாளர் நல அணி துணைச் செயலாளர்களான கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப்பேட்டை S. முகமது உசேன், நாராயண குப்பம் சதாம் உசேன், கொரடாச்சேரி காளிமுத்து,

விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்களான புலியூர் குமார்தரா ராஜ ராஜன், தக்கலை தனுஷ் ராஜா, ஜான் பாட்ஷா ட் B. மோதிலால்,



ஓட்டுநர் நல அணி துணைச் செயலாளர்களான பறக்கும் P. மோகன், திருவாரூர் திருவரங்கன், எட்சுமாங்குடி சசிகுமார், நெல்லை வில்சன்,

சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர்களான பெருந்துார்பேட்டை சுப்பிரமணியன், வடமாமாத்தூர் தக்கர் பா. நஜீர், கருக்குறிச்சி பெ. சின்னசாமி, த. இஜாஸ் தஸ்தகிர்

மற்றும் கழக உடன்பிறப்புகளும் கலந்துகொண்ட இந்த நிகழ்வினை அரங்கேற்றிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது அன்பும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். (05 July 2025)








## காஷ்மீரில் பயிலும் தமிழக மாணவர்களை மீட்க முதல்வர் உத்தரவு

காஷ்மீரில் பயின்று வரும் தமிழக மாணவர்களை பாதுகாப்பாக மீட்டு அழைத்து வர முதல்வரின் விரைந்து செயல்படுமாறு உத்தரவு

இந்திய ராணுவம், எல்லைக்கோட்டருகே உள்ள பயங்கரவாத முகாம்களின் மீது தாக்குதலை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக ஜம்மு & காஷ்மீர் மாகாணத்தில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், அங்கு உள்ள பல கல்வி நிறுவனங்களில், குறிப்பாக ஸ்ரீநகரில் உள்ள தேசிய ஆடைத் தொழில்நுட்ப நிறுவனம் (NIFT) மற்றும் வேளாண் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 41 மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். தற்போதைய சூழ்நிலையில், அவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக தமிழ்நாட்டிற்கு திரும்ப விரும்புவதாகவும், அதற்கான உதவியை தமிழக அரசிடம் கடிதம் மூலமாக கோரியுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணையின் பேரில், தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரியம், தலைவர் திரு. கார்த்திகேயா சிவசேனபதி அவர்களின் தலைமையிலும், உறுப்பினர் செயலாளர் திரு. வள்ளலார், ஐ.ஏ.எஸ் அவர்களின் ஒருங்கிணைப்பிலும், மாணவர்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுத்து வருகிறது.




ஸ்ரீநகர் ஹிணுாய்வீ இயக்குநரும், உதவி இயக்குநரும் நேரில் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், காஷ்மீர் பூர்வீகத்தையும் தமிழ்நாடு கேடரில் பணியாற்றும் அதிகாரியுமான திரு. ஆப்தாப், ஐ.ஏ.எஸ். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. நிலைமை சீராகும் வுடன் மாணவர்கள் பாதுகாப்பாக அழைத்து வரப்படுவார்கள் என அவர் உறுதியளித்துள்ளார்.

தமிழக முதன்மைச் செயலரும் மாணவர்களுடன் நேரடியாக பேசித் தகவல்களைப் பெற்றுள்ளார். மாண்புமிகு முதல்வர் தொடர்ந்து நிலைமையை நன்கு கண்காணித்து வருகிறார். மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கவலையின்றி இருக்க அரசின் அனைத்து முயற்சிகளும் தொடரவுள்ளதாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உதவி அல்லது தொடர்புக்கு:

தொடர்பு/வாட்ஸ்அப்: 75503 31902

டோல்-ஃப்ரீ எண்: 80690 09901

மிஸ்ட்கால் எண்: 80690 09900

Email: nrtwb.chairman@gmail.com








## அயலகத் தமிழர் நல வாரியக் கூட்டம் மற்றும் தின நிகழ்வுகள்

அயலகத் தமிழர் நலவாரியத்தின் கூட்டம் 13ஆம் தேதி சென்னையில் நடைபெற்றது. வாரிய உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு பல்வேறு திட்டங்களைப் பற்றியும், அது தொடர்பான முன்னெடுப்புகளைப் பற்றியும் இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்கு பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நலவாரியம் மென் மேலும் உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்களுக்கு பல்வேறு திட்டங்களையும், சேவைகளையும் எடுத்து செல்வதற்கான முன்னெடுப்புகள் தொடர்பாகவும், புது அலுவலகம் திறந்ததற்கும், அயலகத் தமிழர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவுபெற்றது. (18 February 2025)







## தமிழக அரசின் அயலகத் தமிழர் நாள் நிகழ்வு 2025

சென்னை: தமிழ் மொழியின் பெருமையையும், உலகமெங்கும் வாழும் அயலகத் தமிழர்களின் சமூகத்திற்கும், அவர்கள் ஆற்றிய பங்களிப்புகளையும் சிறப்பிக்கும் நோக்கில், அயலகத் தமிழர் நாள் நிகழ்வு திருவள்ளுவர் ஆண்டு - 2056, ஜனவரி 11 மற்றும் 12, 2025 அன்று நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மைய வளாகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை தமிழக துணை முதல்வர் மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்கவிழாவில், அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் உயர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்வின் சிறப்பு உரைகளை சிறுபான்மை மற்றும் வெளிநாடுவாழ் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு. ஆவடி நாசர் மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் ஆற்றினர். அயலகத் தமிழர்களின் தொழில் முயற்சிகளையும், உலகளாவிய வளர்ச்சியையும் சிறப்பிக்கத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு. தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில், அயலக தமிழர் நலவாரிய உறுப்பினர்கள் திரு. ஜி.பி. ராம், திரு. கால்டுவேல் வேல்நம்பி, மும்பை திரு. மீரான், துபாய் திரு. மீரான், லண்டன் திரு. பைசல், திரு. புகழ்காந்தி, மற்றும் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் திரு. பழ. செல்வகுமார், திரு. அர்ஜுன் துறை, மற்றும் முனைவர் கலைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் இரண்டாம் நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கினார். அரசு தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் எம். சரவணன் அவர்கள் சிறப்பு உரையாற்றினார். நிகழ்ச்சியில், அயலக வாழ் தமிழர்களுக்கான சாதனை விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். பின்னர், அரசு செயலாளர் (பொது மற்றும் மறுவாழ்வு துறை) திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

இந்த நிகழ்வில், 2500க்கும் மேற்பட்ட மாணவர்களும் பல்வேறு தொழில்முனைவோர்களும், 1500க்கும் மேற்பட்ட வெளிமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு, தமிழர்களின் ஒருமைப்பாட்டைச் சுட்டிக்காட்டிய பெருமைமிகு நிகழ்வாகவும், உலகத் தமிழர்களின் சாதனைகளையும் வெற்றிகளையும் உலகம் முழுவதும் பெருமைப்படுத்திய நிகழ்வாகவும் அமைந்தது.





n • Mumbai • 23.4.2023

தினகரன் கதம்பம்

## அயலக தமிழர் நல வாரியம் அமைத்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா

### மும்பையில் கோலாகலம்

மும்பை, ஏப். 23: வெளிநாடு, வெளி மாநிலத் தமிழர் நலன்களுக்காக அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள அலிசேக் மீரானுக்கும் நன்றி மற்றும் பாராட்டுவிழா மும்பை தமிழ் அமைப்புகள் சார்பாக பாண்டுப் மேற்கு வில்லேஜ்ரோடு, பிரைட் மேல்நிலைப்பள்ளி தேவதாசனார் அரங்கத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.



மும்பையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நடந்த பாராட்டு விழாவில் பேசுகிறார் அலிசேக் மீரான். மேடையில் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, ராஜேந்திர சுவாமி, வசந்தகுமார், ஜேம்ஸ் தேவதாசன், ஜனா.ராஜா இளங்கோ, காசிலிங்கம் உள்ளனர்.

அரங்கத்திற்கு நுழைவதற்கு முன்பு வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலைக்கு சட்டப்பேரவைத்தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் விழா அரங்கத்திற்கு வந்ததும் நிகழ்ச்சி தொடக்கமாக தமிழ் தாய் வாழ்த்து பாடி விழா தொடங்கியது. பின்னர் கவிஞர் வ.ரா.தமிழ்நேசன் வரவேற்புரையாற்ற, கருவூர் இரா.பழனிச்சாமி தொடக்கவுரை நிகழ்த்தினர்.

பின்னர் சிறப்பு தீர்மானத்தை அலிசேக் மீரான் வாசித்தார் அதில் வெளிநாடு,வெளி மாநிலத்தமிழர் நலன்களுக்காக அயலக் தமிழர் நல வாரியம் அமைத்து கொடுத்த தமிழக முதல்வருக்கு மும்பை தமிழ் அமைப்புகள் சார்பாக நன்றிகள் தெரிவித்தார். ஜனா.ராஜா இளங்கோ தீர்மானத்தை வாசித்தார். அதில் மும்பை பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைகள் அமைத்துத் தரவேண்டும், மும்பையில் இருந்து தமிழ்நாடு செல்ல கூடுதல் ரயில்கள் இயக்கப்பட வேண்டும். துரந்தோ, கரீப்ரதம் போன்ற ரயில்கள் மும்பையில் இருந்து இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களுக்கு இயக்கப்படுகிறது. ஆனால் மும்பையில் இருந்து சென்னைக்கு இயக்கப்படவில்லை. எனவே, சென்னை மற்றும் தமிழகத்தின் முக்கிய பகுதிகளுக்கு இயக்க முயற்சி எடுக்க வேண்டும், தமிழ்நாடு இல்லம் அமைத்துத் தரவேண்டும், மும்பை தமிழ்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஜாதிசான்றிதழ் அங்கீகாரம் பெற்று தரவேண்டும் என 4 கோரிக்கைகளை முன்வைத்தார்.

பின்னர் பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்க முன்னாள் தலைவர் கே.வி.அசோக்குமார், பாண்டுப் தமிழ்ச் சங்க தலைவர் ச.சி.தாசன், மும்பை யாதவ மகாசபை லட்சுமணன், பட்டிமன்ற பேச்சாளர் புவனா வெங்கட், தருண் பாரத் சேவா சங்க தலைவர் ராஜேந்திர சுவாமி, மும்பை திராவிட கழக தலைவர் பெ.கணேசன், வே.ம.உத்தமன், ஹரிராம்சேட் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர். ஜேம்ஸ் தேவதாசன், ராஜேந்திர சுவாமி, முனைவர் வதிலைபிரதாபன், அண்ணாமலை, எம்.எஸ்.காசிலிங்கம், மா.கருண், அமலா ஸ்டாலின், பெ.கணேசன், மிக்கெல் அந்தோணி, அ.ரவிச்சந்திரன், உட்பட பலர் வாழ்த்துரை நிகழ்த்த வே.சதானந்தன் நன்றிரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.









இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli


தென்னை விவசாயிகளின் நலன் காக்க

## நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்கும் திட்டம்!

### அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

சென்னை, மே 24 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிக அளவு தென்னை சாகுபடி நடைபெறுகிறது. இதையுணர்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 2006-2011 ஆட்சிக் காலத்தில் தென்னை விவசாயிகளின் நலன் காக்க தென்னை நல வாரியத்தை அமைத்தார்கள்.

2021 ஆம் ஆண்டு மீண்டும் நமது கழக ஆட்சி வந்தவுடன் நமது தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு கழக சுற்றுச்சூழல் அணி சார்பாக தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் விதமாக நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்குமாறு கோரிக்கை வைத்தோம். அதைக் கனிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள் சோதனை முயற்சியாக 4 மாவட்டங்களில் தேங்காய் எண்ணெய் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இதை போகப் போக தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல் தென்னை மர மேறும் தொழிலாளர்கள், தேங்காய் உடைக்கும் கூலித் தொழிலாளர்கள் போன்றோர் பயனடைவர்.

என்றுமே விவசாயிகளின் நலன் காக்கும் தி.மு.கழக அரசு இத்திட்டத்தை கொண்டு வந்ததற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சருக்கும் தென்னை விவசாயிகள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் அடுத்தகட்டமாக காங்கேயம் பகுதியில் SIDCO அல்லது SIPCOT மூலமாக தென்னைக்கு நிரந்தர பொருட்காட்சி மற்றும் காட்சிப்படுத்தல் கூட்டிடம் அமைக்கும்படி விரும்பிகேட்டுக்கொள்கிறேன். அத்துடன் தேங்காயின் மூலம் மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரிக்க காங்கேயம் பகுதியில் தென்னை தொழிற்சாலை பூங்கா அமைக்க அரசை கேட்டுக்கொள்வதோடு எனது நன்றியினையும் தெரிவித்து கொள்கின்றேன் என்று அயலக தமிழர் நலவாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்துள்ளார்.

சேலம் ஒருங்கிணைந்த

## மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் அறிவிப்பு!

சேலம் மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு மாவட்டக் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் 30.05.2023 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சேலம் 5 ரோடு, ஸ்ரீரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.












சிங்கப்பூர்த் தமிழ் அமைப்புகள் பல ஒன்றிணைந்து இம்மாதம் 24ஆம் தேதி புதன்கிழமை மாலை சன்டெக் சிட்டி மாநாட்டு, கண்காட்சி மையத்தில் அளித்த வரவேற்பில் தம் துணைவியாருடன் கலந்துகொண்டார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். சட்ட, உள்துறை அமைச்சர் கா. சண்முகம் (முதல்வருக்கு வலப்புறம்) உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். **படம்: திமத்தி டேவிட்**

# ஸ்டாலின்: நெஞ்சுக்கு நெருக்கமான சிங்கப்பூர்

*வரும் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும் என்ற தமது இலக்கை எட்டும் வகையில், முதலீடுகளை ஈர்ப்பதற்காகக் கடந்த வாரம் சிங்கப்பூர் வந்திருந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ் முரசு நாளிதழுக்கு அளித்த சிறப்பு நேர்காணல்*



**இர்ஷாத் முஹம்மது**
**செய்தி ஆசிரியர்**

'நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்று தமிழக முன்னாள் முதல்வரும் காலஞ்சென்ற தம் தந்தையாருமான கலைஞர் கருணாநிதி சொல்வார். அந்த வகையில், வரும் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளியலை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக (S$1.35 டிரில்லியன்) உயர்த்த வேண்டும் என்று இலக்கு வகுத்துச் செயல்பட்டு வருவதாகக் கூறுகிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அந்த இலக்கை எட்டிச் சாதிப்பது என்பது அவ்வளவு எளிதன்று எனத் தெரிந்தாலும் அது தாங்களாகவே வகுத்துக்கொண்ட இலக்கு என்று திரு ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அந்த இலக்கை அடையத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், அதற்கான வரைவுத்திட்டத்தைத் தயாரிக்க 'போஸ்டன் கன்சல்டிங் குரூப்' எனும் ஆலோசனை நிறுவனத்தைப் பணியில் அமர்த்தி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளியல் என்ற இலக்கை எட்ட தமிழ்நாட்டிற்கு மேலும் 2,300,000 கோடி ரூபாய் முதலீடு தேவை. அதன்மூலம் 4,600,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

இதற்கான எல்லா முயற்சிகளையும் தாங்கள் எடுத்து வருவதால் தங்களால் இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று உறுதியாகச் சொன்னார் திரு ஸ்டாலின்.

## நம்பிக்கை தரும் சிங்கப்பூர்

தமிழ் ஆட்சிமொழியாக இருக்கும் நாடு, தமிழர்கள் அதிகம் வாழும் நாடு என்பதால் சிங்கப்பூர்மீது அளவில்லாப் பற்று கொண்டுள்ளதாகவும் அது தம் நெஞ்சுக்கு நெருக்கமான நாடாகத் திகழ்வதாகவும் கூறினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 30 சிங்கப்பூர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அசென்டாஸ் நிறுவனம், தரமணியில் ஒரு மிகப் பெரிய தொழில்நுட்பப் பூங்காவை நிறுவியுள்ளது.

டெமாசெக், டிபிஎஸ் வங்கி, மேப்பிள்ட்ரீ, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் போன்ற பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் செய்து வருகின்றன.

"கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.4,800 கோடி (S$785 மில்லியன்) முதலீட்டில் நான்கு சிங்கப்பூர் நிறுவனங்கள் தமிழ்நாட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம் 6,200 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் பல திட்டங்களுக்கு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

"மின்னணுவியல், வாகன உதிரி பாகங்கள், தடையற்ற வணிக, பொருளியல் மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பம், உணவுப் பதப்படுத்துதல், மருந்து ஆலை போன்ற பல்வேறு துறைகளில் அந்நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. மின் வாகனங்களுக்கான மின்னூட்ட நிலையங்கள் போன்ற புதிய துறைகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

"தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில், பல்வேறு மாவட்டங்களிலும் இந்தத் திட்டங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"எனவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குச் சிங்கப்பூர் பெரும் பங்காற்றி வருகிறது. இன்னும் கூடுதலாகப் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

"புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. 2024 ஜனவரியில் உலக முதலீட்டாளர் மாநாடு சென்னையில் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்கும்படி சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கவும் வந்துள்ளேன்," என்று திரு ஸ்டாலின் கூறினார்.

## உலகத் தமிழருக்கு ஆதரவு

காலஞ்சென்ற முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கும் பரவியுள்ள தமிழ்ச் சமூகத்தின் தலைவராகவும் விளங்கியதாகக் குறிப்பிட்ட திரு ஸ்டாலின், அதே வழியைத் தாமும் பின்பற்றுவதாகக் குறிப்பிட்டார்.

"உலகில் எங்கு தமிழர்களுக்கு எந்த பாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.

"அண்மையில் இலங்கையில் பொருளியல் நெருக்கடி ஏற்பட்ட போது தமிழ்நாடு கைகொடுத்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த நாட்டுக்கு அரிசி, பால் மாவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்டவற்றை அனுப்பி வைத்தோம்.

"மேலும், தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சிறப்பான வாழ்வியல் சூழலை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவில் 7,400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்கத் திறன்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

"உக்ரேன் நாட்டில் போர் நடந்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் இருந்து அங்கு மருத்துவம் படிக்கச் சென்ற மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள். உடனடியாக பத்திரமாக அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து அவர்கள் வீடுவரை கொண்டு சேர்த்தோம்," என்று திரு ஸ்டாலின் நினைவுகூர்ந்தார்.

## வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்–இணைப்புப் பாலம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் அப்போதைய திமுக அரசால் இயற்றப்பட்டது.

அவ்வகையில், தேர்தலில் வென்று திமுக மீண்டும் அரியணை ஏறியதும் 'வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்பட்டது.

அவ்வாரியத்தின்மூலம் ஏராளமான பணிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்ட முதல்வர் ஸ்டாலின், "உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு தாய்வீடு என்பது தமிழ்நாடுதான்," என்றார்.

"உலகம் முழுக்க வாழும் தமிழர்களை ஒரு குடையின்கீழ் கொண்டு வரும் அமைப்பாக அவ்வாரியம் அமைய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுத்துவோம். தாய்த்தமிழ்நாட்டையும் அயலகத் தமிழர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக அவ்வாரியம் செயல்படும். தமிழ் மொழி, தமிழிசை, நாட்டியம், பண்பாடு ஆகியவற்றை அடுத்த தலைமுறைத் தமிழர்களுக்குக் கொண்டு செல்லும் பணியையும் அந்த வாரியம் செய்யும்," என்று திரு ஸ்டாலின் தெரிவித்தார்.

## சவாலான காலகட்டம்

பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் திமுக அரசு எண்ணெண்ண சவால்களைக் கடந்து வந்துள்ளது. இனி எத்தகைய சவால்களை எதிர்நோக்குகிறது என்பது பற்றியும் முதல்வர் ஸ்டாலின் விரிவாகக் கூறினார்.

"உண்மையில் இது சவாலான காலம்தான். பூக்கள் நிறைந்த அழகிய சாலையில் நான் பயணம் செய்யவில்லை. முள்ளிலும் பாழ்பட்டுக்கிடக்கும் சாலையில் – குண்டும் குழியும் – மேடும் பள்ளமும் – கல்லும் முள்ளும் ஆணியும் கொண்ட சாலையில் பயணம் செய்வதைப் போலத்தான் முதல் சில மாதங்கள் இருந்தன.

"தமிழக அரசுக்கு 500,000 கோடி ரூபாய் கடன் என்றதொரு கடுமையான சூழலில்தான் முதல்வராக நான் பதவியேற்றேன். அந்த நேரத்தில் கொரோனா இரண்டாவது அலை பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியிருக்கிறது. அப்பேரிடரிலிருந்து மக்களைக் காப்பதே முதல் கடமையாக இருந்தது.

"அதனைச் சரியாக நிறைவேற்றி, அதன் பிறகு தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சவாலான பணியை மேற்கொள்ளத் தொடங்கினோம். நிதி நிலைமை ஓரளவு சரிசெய்யப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைத்திருக்கிறோம். உற்பத்தி பெருகி உள்ளது. புதிய நிறுவனங்கள் வந்துள்ளன. வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இருப்பினும், நாங்கள் போக வேண்டிய தூரம் இன்னமும் இருக்கிறது.

"என்னைப் பொறுத்தவரை, இவற்றையெல்லாம் சவால்களாக நினைக்கவில்லை. பொதுவாழ்க்கையில், அரசு நிர்வாகத்தில் இவற்றை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

"எதிர்மறையாகப் பேசி காரணங்களைத் தேடுவதைவிட, நேர்மறையாகச் சிந்தித்து சாதனைகளைச் செய்வதையே நான் விரும்புகிறேன். அப்படித்தான் செயல்பட்டு வருகிறேன்," என்றார் திரு ஸ்டாலின்.



முதல்வர் ஸ்டாலினுடன் தமிழ் முரசு செய்தி ஆசிரியர் இர்ஷாத் முஹம்மது. **படம்: எஸ்.வெங்கடேஷ்வரன்**

> உலகம் முழுவதும் பரவி வாழ்ந்துவரும் தமிழர்களுக்குத் தாய்வீடு தமிழ்நாடே என்ற உணர்வோடு செயல்பட்டு வருகிறோம். அவ்வெண்ணத்துடனே அயலகத் தமிழர்களின் பல்வேறு தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கில் வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியத்தை ஏற்படுத்தியுள்ளோம். தாய்த் தமிழ்நாட்டையும் அயலகத் தமிழர்களையும் ஒன்றிணைக்கும் பாலமாக அது விளங்கும்.
>
> **தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்**

## தமிழர் நலனே முக்கியம்

'தமிழ்நாட்டில் இப்போது வடஇந்தியர்கள் பெருகிவிட்டனர். சிறு நகரங்களிலும்கூட அவர்களை அதிகம் காண முடிகிறது. அவர்கள் இல்லையேல் தொழிற்சாலைகள் முடங்கிப் போகும்' என்ற நிலை இருப்பதாக தமிழக வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனையடுத்து, வடஇந்தியர்களின் வருகை அதிகரிப்பால் தமிழ்நாட்டிற்கு நன்மையா தீமையா என்று தமிழ் முரசு கேட்டது.

அதற்கு, "தமிழ்நாடு வளர்ந்து வரும் மாநிலமாக இருப்பதால் வடமாநிலத் தொழிலாளர்கள் வேலைக்காகத் தமிழகத்திற்கு வருகிறார்கள். அவ்வளவுதான்! இது தமிழ்நாட்டுக்கு நன்மையே தவிர தீமையன்று. அதற்காக மற்றவர்களது வேலைவாய்ப்பை அவர்கள் பறித்துக்கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

"எங்களைப் பொறுத்தவரை, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் மேன்மையுமே முக்கியம். அதில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருப்போம். தமிழ் கட்டாயம், வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்," என்று திரு ஸ்டாலின் பதிலளித்தார்.

## சொத்து வரி உயர்வு

தமிழ்நாட்டில் சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது குறித்துச் சிங்கப்பூரில் வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்களில் சிலர் கவலை தெரிவித்து இருப்பது குறித்தும் முதல்வரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு, இந்திய அரசின் 15வது நிதி ஆணையம் அறிவித்த வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டின் சொத்து வரி விகிதம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகத் திரு ஸ்டாலின் குறிப்பிட்டார்.

"மாநில அரசின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் சொத்துவரி விகிதத்தை மாற்றி அமைத்திட வேண்டும் என்று ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15வது நிதி ஆணையம் அறிவுறுத்தியுள்ளது," என்று அவர் சொன்னார்.

தமிழ்நாட்டில் சொத்து வரியானது, இந்தியாவின் மற்ற பெருநகரங்களோடு ஒப்பிடும்போது, மிகவும் குறைவாகவே வசூலிக்கப்படுகிறது என்றும் திரு ஸ்டாலின் குறிப்பிட்டார். மும்பை, பெங்களூரு, கோல்கத்தா, புனே ஆகிய நகரங்களைக் காட்டிலும் சென்னையில் சொத்து வரி குறைவு என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட சொத்துவரி உயர்வு என்பது 83 விழுக்காடு வீடுகளுக்கு மிகக் குறைவான அளவில்தான் உயர்த்தப்பட்டுள்ளது என்ற புள்ளிவிவரங்கள் சொல்வதையும் அவர் தெரிவித்தார்.

## கொள்கை உரமும் தொண்டர் படையும்

அதிமுக பிளவுபட்டுக் கிடப்பது திமுகவிற்குச் சாதகமா எனக் கேட்டதற்கு, "அதிமுக இப்போது நான்கு அணிகளாகப் பிரிந்து கிடக்கிறது. அதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. அவர்களது பலவீனத்தை நாங்கள் அரசியல் செய்வதில்லை. எங்களது கொள்கைகளையும் தொண்டர் பலத்தையும் நம்பியே எப்போதும் இருப்போம்," என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன், கலைஞர் காலத்தில் நிகழ்ந்ததைப்போல, பாஜகவுடன் திமுக கூட்டு சேர வாய்ப்பில்லை என்ற அவர், வாஜ்பாய் தலைமையிலான அன்றைய பாஜகவிற்கும் இன்றைய பாஜகவிற்கும் நிறைய வேறுபாடு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அமைச்சராக தம் மகன் உதயநிதியின் செயல்பாடு பெருமைப்படத்தக்க வகையில் இருப்பதாகத் திரு ஸ்டாலின் நெகிழ்ச்சியுடன் கூறினார்.

## தமிழ் முரசு யோசனைக்கு முதல்வர் வரவேற்பு

உலகெங்கிலும் உள்ள தமிழ்ப் படைப்பாளிகளை அங்கீகரித்து சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்க வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டதற்கு, "நல்ல யோசனை. உறுதியாகச் செய்யலாம்," என்று முதல்வர் ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

அத்துடன், முன்னைய திமுக ஆட்சியில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தியதுபோல, இம்முறையும் அதற்கான திட்டம் உண்டு என்றும் அதற்கான சூழல் அமையும்போது உரிய அறிவிப்பு வெளியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

irshathm@sph.com.sg



# SWINDON TAMIL ASSOCIATION

Swindon UK
13/11/2024

To
Mr. Karthikeya Sivasanapathy
Chairman
Non Resident Tamils Welfare Board
Thiruppur- 638 108, Tamil Nadu

**Subject: Thank you- for Assisting in travel document for Reuniting Mr. Rocharla Jornes Maria Selvaraj with his family.**

Dear Sir, Vanakkam

First of all, I would like to express my gratitude to you and the TN government (Nandri) for your helping to arrange Maria Selvaraj's temporary passport so he could reunite with his family.

On Saturday, November 9th, I messaged you on WhatsApp on this case, explaining that Maria Selvaraj had lost his visa and passport and that he needed temporary travel document to travel back to Tamil Nadu. I requested you to escalate this application on Consulate India regarding his delayed application for a temporary travel document. On the same day, I received prompt responses from you. It was really appreciated.

Subsequently, I have emailed you with all information, and then you wrote the letter to consulate India on Monday 11th November, your responses were incredibly prompt. Also, your personal communication with CG on this case. Thank you.

Consulate India, Birmingham called and emailed the candidate on November 12th to arrange for the pickup of the available temporary passport. The document was picked up by Maria Selvaraj today, November 13, 2024.

Much appreciated for your help. Again, I take this opportunity to thank Mr . Karthikeya Sivasanapathy, Chairman, Non Resident Tamils Welfare Board and his team helped Mariya Selvaraj who is in trouble with his travel back to Tamil Nadu, to reunite with his family.

Thanks
Regards

Siva Murugesan, Chair, Swindon Tamil Association



**தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சிங்கப்பூர் பயணத்தின்போது**, மன்னார்குடியில் திரு லீ குவான் யூ சிலை மற்றும் நூலகம் அமைக்கப்படும் என அறிவித்தார். சிங்கப்பூர்த் தமிழர்கள் அளித்த வரவேற்பில், புலம்பெயர் தமிழர்களுக்குத் தமிழகம் அரணாக விளங்கும் என அவர் உறுதிபடத் தெரிவித்தார். சிங்கப்பூர் தலைவர்களின் தமிழ்ச் சமூக பங்களிப்பை அவர் பாராட்டினார். அயலகத் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகளையும், சிங்கப்பூர்த் தமிழர்களின் கோரிக்கைகளையும் பரிசீலிப்பதாகக் கூறினார். சட்ட, உள்துறை அமைச்சர் கா. சண்முகம், தமிழ்நாட்டின் ஒரு டிரில்லியன் டாலர் ஜிடிபி இலக்கை பாராட்டினார்.









தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு
சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளின்
வரவேற்பு நிகழ்ச்சி.
Guest of Honour
Minister for Home Affairs & Minister for Law
K. Shanmugam
TAMIL ORGANISATIONS IN SINGAPORE
WELCOME
The Chief Minister of Tamil Nadu
Hon. M.K.STALIN









Suntec








**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.


01.08.2025

**திரு. பிச்சை உடையப்பன் சுப்பையா அவர்களுக்கு,**

திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது மட்டுமல்ல, பெருமையும் தேட முடியும் என்பதை நிரூபித்துள்ள தங்களுக்கு என்னுடைய பாராட்டுகள்.

சிங்கப்பூரின் தஞ்சோங் காத்தோங்கில் திடீரென்று உருவான பள்ளத்தில் விழுந்த பெண் ஓட்டுநரை, மிகவும் சாதுரியமாகச் செயல்பட்டுக் காப்பாற்றியுள்ள தங்களின் செயல் சிங்கப்பூர் நாட்டினரிடையே புலம்பெயர் தமிழர்கள் குறித்த மதிப்பை மேலும் பன்மடங்கு கூட்டியிருப்பதைச் சமூக வலைத்தளங்கள் வாயிலாக நான் அறிந்தேன். அயல்நாட்டிலும் தமிழரின் பரந்த மனமும் மனிதநேயமும் அங்கீகரிக்கப்படுவதற்குத் தங்களது இந்தச் செயல் உதவியுள்ளதைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

இக்கட்டான சூழ்நிலையிலும் சமயோசிதமாகச் சிந்தித்து, பள்ளத்தில் இருப்பவரைக் கயிறு இறக்கிக் காப்பாற்றலாம் என ஆலோசனை கூறி, தங்களுடன் இருந்த பிற இந்தியத் தொழிலாளர்களுக்கும் ஆபத்து நேராமல் தாங்கள் தடுத்துள்ளீர்கள் என்பது கூடுதல் பாராட்டுக்குரியது.

சிங்கப்பூர் மக்கள், அந்நாட்டின் அரசு, அங்குள்ள தொண்டு நிறுவனங்கள் என அனைவரின் பாராட்டையும் நன்றியையும் பெற்றுள்ள தங்களைத் தாய்மண்ணாம் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறேன்.

இப்படிக்கு,

(மு.க.ஸ்டாலின்)



## சிங்கப்பூரில் பெண்ணைக் காப்பாற்றிய தமிழ்நாட்டு ஊழியருக்கு முதல்வர் பாராட்டு.

26 ஜூலை 2025 சனிக்கிழமை மாலை சிங்கப்பூரில் தஞ்சோங் காத்தோங் பகுதியில் சாலையில் ஏற்பட்ட புதைகுழியில் காருடன் விழுந்த பெண்ணை, அப்போது அருகில் பணியில் இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டுமானத்தள மேற்பார்வையாளர் திரு.பிச்சை உடையப்பன் சுப்பையா சமயோசிதமாகச் சிந்தித்து, அவருடன் வேலை செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு தொழிலாளர் நண்பர்களின் உதவியுடன் துரிதமாகச் செயல்பட்டுக் காப்பாற்றினார்.

சிங்கப்பூரின் அதிபர் திரு தர்மன் சண்முகரத்தினம் அவர்கள் உள்ளிட்ட பலரும், பொதுமக்களும் அந்தத் தொழிலாளர்களைப் பாராட்டி வருகின்றனர். அதிபர் அவர்கள் அனைவரையும் வரும் ஞாயிறு அன்று தன்னைச் சந்திக்கவும் அழைப்பு விடுத்திருக்கிறார்.



பிச்சை உடையப்பன் சுப்பையாவைப் பாராட்டி, தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் அனுப்பியிருந்த தனிப்பட்ட பாராட்டுக் கடிதத்தை, அயலக நலவாரிய உறுப்பினர் திரு ராம் அவர்கள் இன்று சிங்கப்பூரில், திரு சுப்பையாவின் பணியிடத்துக்கு நேரில் சென்று சந்தித்து ஒப்படைத்தார். முதல்வர் சார்பில் பாராட்டையும் தெரிவித்தார். அவருடன் கவிஞர் இறை.மதியழகன், திரு சசிகுமார் ஆகியோரும் சென்று பாராட்டினர்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது மட்டுமல்ல, பெருமையும் தேட முடியும் என்பதை நிரூபித்துள்ள தங்களுக்கு என்னுடைய பாராட்டுகள். அயல்நாட்டிலும் தமிழரின் பரந்த மனமும் மனிதநேயமும் அங்கீகரிக்கப்படுவதற்குத் தங்களது இந்தச் செயல் உதவியுள்ளதைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன். என்று முதல்வர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். முதல்வர் அவர்களே பாராட்டுக் கடிதம் அனுப்பியிள்ளது மனதுக்கு மகிழ்ச்சியாகவும் தனக்கு மிகவும் பெருமையாக இருப்பதாக, திரு சுப்பையா கூறினார்.

47 வயது மேற்பார்வையாளர் பிச்சை உடையப்பன் சுப்பையா காரைக்குடியைச் சேர்ந்தவர். உடன் இணைந்து அப்பெண்ணை மீட்க உதவிய அவரது சக ஊழியர்கள் திரு அன்பழகன் வேல்முருகன் 26, திரு பூமாலை சரவணன் 28, திரு கணேசன் வீரசேகர் 32, திரு போஸ் அஜித்குமார் 26, திரு ஆறுமுகம் சந்திரசேகரன் 47, திரு. சாத்தப்பிள்ளை ராஜேந்திரன் 55 ஆகியோர் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து அங்கு சென்று பணிபுரிந்து வருபவர்கள்







முரசொலி 75

15வது வார்டு : 106, 107 ஆகிய 2 வாக்குச் சாவடிகள்.
17வது வார்டு : 115, 116 ஆகிய 2 வாக்குச் சாவடிகள்.

16வது வார்டு : 124, 125, 126 ஆகிய 3 வாக்குச் சாவடிகள்.
18வது வார்டு : 112, 113, 114 ஆகிய 3 வாக்குச் சாவடிகள்.

, 331, 332, 333, 334, 335
21 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்
ண்ட வே. கள்ளிப்பாளையம்
ளயம் ஊராட்சி என மொத்தம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01.08.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## க்கு மாலை!

### ிக்கிறார்!

துள்ள தோற்றத்தில் தீரன் சின்னமலையின் முழு உருவச் சிலையினை அமைத்து 4.10.1998 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நடைபெறும் இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### சிங்கப்பூரில் பெண்ணைக் காப்பாற்றிய

# தமிழ்நாட்டு ஊழியருக்கு முதல்வர் பாராட்டு!

சிங்கப்பூர், ஆக. 3-

26 ஜூலை 2025 சனிக்கிழமை மாலை சிங்கப்பூரில் தஞ்சோங் காத்தோங் பகுதியில் சாலையில் ஏற்பட்ட புதைகுழியில் காருடன் விழுந்த பெண்ணை, அப்போது அருகில் பணியில் இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டுமானத்தள மேற்பார்வையாளர் பிச்சை உடையப்பன் சுப்பையா சமயோசிதமாகச் சிந்தித்து, அவருடன் வேலை செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு தொழிலாளர் நண்பர்களின் உதவியுடன் துரிதமாகச் செயல்பட்டுக் காப்பாற்றினார்.



சிங்கப்பூரின் அதிபர் தர்மன் சண்முகரத்தினம் அவர்கள் உள்ளிட்ட பலரும், பொதுமக்களும் அந்தத் தொழிலாளர்களைப் பாராட்டி வருகின்றனர். அதிபர் அவர்கள் அனைவரையும் இன்று ஞாயிற்றுக் கிழமை தன்னைச் சந்திக்கவும் அழைப்பு விடுத்திருக்கி றார்.

பிச்சை உடையப்பன் சுப்பையாவைப் பாராட்டி, தமிழ்நாட்டின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அனுப்பியிருந்த தனிப்பட்ட பாராட்டுக் கடிதத்தை, அயலக நலவாரிய உறுப்பினர் ராம் அவர்கள் நேற்று சிங்கப்பூரில், சுப்பையாவின் பணியிடத்துக்கு நேரில் சென்று சந்தித்து ஒப்படைத்தார். முதல்வர் சார்பில் பாராட்டையும் தெரிவித்தார். அவருடன் கவிஞர் இறை.மதியழகன், சசிகுமார் ஆகியோரும் சென்று பாராட்டினர்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது மட்டுமல்ல, பெருமையும் தேட முடியும் என்பதை நிரூபித்துள்ள தங்களுக்கு என்னுடைய பாராட்டுகள். அயல்நாட்டிலும் தமிழரின் பரந்த மனமும் மனிதநேயமும் அங்கீகரிக்கப் படுவதற்குத் தங்களது இந்தச் செயல் உதவியுள்ளதைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்." என்று முதல்வர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். முதல்வர் அவர்களே பாராட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது மனதுக்கு மகிழ்ச்சியாகவும் தனக்கு மிகவும் பெருமையாக இருப்பதாக, சுப்பையா கூறினார்.

47 வயது மேற்பார்வையாளர் பிச்சை உடையப்பன் சுப்பையா காரைக்குடியைச் சேர்ந்தவர். உடன் இணைந்து அப்பெண்ணை மீட்க உதவிய அவரது சக ஊழியர்கள் அன்பழகன், வேல்முருகன் 26, பூமாலை சரவணன் 28, கணேசன் வீரசேகர் 32, போஸ் அஜித்குமார் 26, ஆறுமுகம் சந்திரசேகரன் 47, சாத்தப்பிள்ளை ராஜேந்திரன் 55 ஆகியோர் அனைவரும் தமிழ்நாட்டிலிருந்து அங்கு சென்று பணிபுரிந்து வருபவர்கள்.




திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட ஒண்டி குப்பம் பகுதியில் சலவை தொழிலாளர் குடியிருப்பு உள்ளது இங்கு வசிப்பவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ஐந்து பிரிவுகளாக 160 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது இந்நிலையில் பயனாளர் பங்கீட்டுத் தொகையினை முழுவதுமாக செலுத்திய பயனாளிகளுக்கு திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் கிரைய பத்திரத்தை வழங்கினார்.



ஆகஸ்ட் 9, 2025, ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரில் அயலகத் தமிழர் ஒற்றுமையை கொண்டாடிய ஒரு மறக்க முடியாத நிகழ்வாக இன்று அமைந்தது. ஆஸ்திரேலிய நாட்டில் பெரியார் ,அம்பேத்கர் சிந்தனை வட்டம் (ஊணுபுவீளீபு) ஏற்பாடு செய்திருந்த இந்த சிறப்பு நிகழ்வில், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் என்ற முறையில் பங்கேற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு பார்வையில் உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம், வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வழங்கும் சட்ட, நிதி மற்றும் பண்பாட்டு ரீதியிலான உதவிகள் குறித்து விளக்கினேன்.

வெளிநாடு வாழ் தமிழ் சமூகம், முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் அயராத முயற்சிகளுக்கு தங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். அவரது அர்ப்பணிப்பு, தமிழ்நாட்டிற்கும், புலம்பெயர் தமிழர்களுக்கும் இடையேயான பிணைப்பை வலுப்படுத்துவதோடு, உலகளவில் தமிழ் பாரம்பரியம் தொடர்ந்து நிலைத்திருப்பதை உறுதி செய்கிறது என அவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டனர். சமூக நீதி, சமத்துவம், மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாடு ஆகிய அவரது தலைமைப் பண்புகளையும் பங்கேற்பாளர்கள் பாராட்டினர்.

முன்னாள் செனட்டர் லீ ரியன்னான் மற்றும் ஹிரீநி எம்.பி வாரன் கிர்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியில், சிட்னியைச் சேர்ந்த ஞானகுரு தினகரன் செல்லையாவின் சனாதன லீக்ஸ் மற்றும் ஊணபுவீளீபு அமைப்பின் பொதுச்செயலாளர் சுமதி விஜய் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த தொ. பரமசிவத்தின் இந்து தேசியம் ஆகிய இரண்டு முக்கியமான நூல்களும் வெளியிடப்பட்டன.














100-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், பாரம்பரிய தமிழ் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள், நிகழ்வை மேலும் சிறப்பித்தன. புலம்பெயர் தமிழர் வாழ்வில் தமிழ் பண்பாடு எவ்வளவு உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டியது.

இத்தகைய அருமையான நிகழ்வினை ஒருங்கிணைத்த PATAC அமைப்புக்கும், உலகத் தமிழர்களை உயர்த்துவதற்காக அயராது பாடுபடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிகழ்வு, தமிழ்நாடு அரசுக்கும், ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ்ச் சமூகத்திற்கும் இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகிறேன்.








ஆஸ்திரேலிய கண்டத்தில் மெல்போர்ண் மாநகரில் நடந்த ஆஸ்திரேலிய நாட்டின் பெரியார்- அம்பேத்கார் சிந்தனை வட்டம் மற்றும் அயலகத் தமிழர் நல வாரியத்தின் நிகழ்ச்சி...

ஆஸ்திரேலிய நாட்டின் பெரியார்- அம்பேத்கர் சிந்தனை வட்டம் (PATCA) மற்றும் தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியம் (ஹியூவீநிய) இணைந்து, 2025 ஆகஸ்ட் 10 அன்று மெல்போர்ணில் ஒரு சிறப்புமிக்க நிகழ்வை நடத்தியது. இந்த நிகழ்வில், ஹியூவீநிய-இன் தலைவர் திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள், வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான வாரியத்தின் பல்வேறு தமிழர் நலனுக்கான சீரிய முயற்சிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.



திரு. கார்த்திகேய சிவசேனாபதி பேசுகையில், அயலகத் தமிழர் நல வாரியம், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது என்று தெரிவித்தார். புகார்களைத் தீர்ப்பது, சட்ட உதவிகள் வழங்குவது, போன்ற முக்கியமான பணிகளை வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும், உலகத் தமிழர் புலம்பெயர் தினம் போன்ற நிகழ்வுகள் மூலம் கலாச்சாரப் பாதுகாப்பையும், ஒற்றுமையையும் மேம்படுத்துகிறது என்றும் கூறினார்.

PATCA-இன் தலைவர் டாக்டர் அண்ணாமலை மகிழ்நன், பெரியார் மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரின் சமூக நீதி கொள்கைகளை மையப்படுத்தி, தனது தொடக்க உரையை ஆற்றினார்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, மெல்போர்ண் வாழ் தமிழர்கள் ஆர்வத்துடன் எழுப்பிய கேள்விகளுக்கு திரு.கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் தெளிவான விளக்கங்களை அளித்தார். புலம்பெயர் தமிழர்களின் அன்றாடப் பிரச்சனைகள், சட்டச் சிக்கல்கள், மற்றும் கலாச்சாரத் தேடல்கள் எனப் பல விஷயங்கள் குறித்து





கலந்துரையாடப்பட்டது. இந்த கலந்துரையாடல், தாயகத்திற்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் இடையே ஒரு வலுவான பிணைப்பை ஏற்படுத்தும்

நிகழ்வில் கலந்துகொண்ட தமிழர்கள், அயலகத் தமிழர் நலனுக்காக முதலமைச்சர் மாண்புமிகு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர். அவரது தொலைநோக்குத் திட்டங்கள், சமூக நீதி, கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுவதாகவும், அவர் உலகளவில் வாழும் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியாக இருப்பதாகவும் பலரும் பாராட்டினர்.

இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்திய PATCA அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான அரங்க. மூர்த்தி, சுரேஷ், ராதிகா, பொருளாளர் திருமலை நம்பி, மற்றும் உறுப்பினர்கள் வசந்த குமார், இளையமதி, சரவணன் ஆகியோருக்கு திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். 150-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த நிகழ்வு, தமிழ்நாட்டிற்கும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் இடையேயான உறவை வலுப்படுத்துவதில் பெரும் பங்காற்றும்.








1820 ஆம் ஆண்டு கனடாவில் பிறந்த ஜி.யு. போப் அவர்கள், தமிழ்நாட்டிற்கு வந்து திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற பல்வேறு தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து உலகறியச் செய்தவர். அவரை நினைவுகூரும் வகையில், ஆக்ஸ்போர்ட் நகரத்தில் அமைந்துள்ள அவருடைய கல்லறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் சென்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்மொழியையும் பண்பாட்டையும் கொண்டாடக்கூடியவர்களைத் திராவிட முன்னேற்றக் கழகமும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அவருடைய அரசும் பேணி பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், அதனை கொண்டாடக்கூடிய அரசியல் தலைவராகவும் இருப்பதை அங்கு பலரும் பாராட்டினர். இந்த நிகழ்வை, ஆக்ஸ்போர்ட் நகரத்தில் இருக்கும் மிக முக்கியமான குடும்பங்களில் ஒன்றான ஜென்னிங்ஸ் குடும்பத்தைச் சேர்ந்த திரு. மைக் ஜென்னிங்ஸ் அவர்கள் மற்றும் திருமதி விமலா ஜென்னிங்ஸ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.



அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் என்ற முறையில் நானும், உறுப்பினர்கள் திரு. முகமது பைசல், திரு. ஜி.வி. ராம், திரு. புகழ் காந்தி, லண்டன் செந்தில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களும் அனைவருடன் இணைந்து கலந்து கொண்டார்.





2025 செப்டம்பர் 4 ஆம் தேதி, இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் படத்தை திறந்து வைத்து, திராவிட இயக்கத்தின் 100 ஆண்டு பாரம்பரியத்தை சிறப்பித்துரைத்தார்.

இந்த நிகழ்வில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக முனைவர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் பங்கேற்றனர்.

முதல்வர் அவர்கள் திராவிட இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையும் எடுத்துரைத்து, மூன்று புதிய புத்தகங்களையும் வெளியிட்டார்.











தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்



அயலகத் தமிழர் நலவாரியம்






























ace: Hotel Peninsula, London
Date: 6th Sep, 2025




100 YEARS OF SELF RESPECT MOVEMENT


@DMKITWing




2025
NRTIA
UK Summit
தமிழ்க்
கனவு
























@DMKITWing




2025
NRTIA
UK Summit
Place: Hotel Peninsula, London
Date: 6th Sep, 2025
மாபெரும்
தமிழ்க்
கனவு





















## Non-Resident Tamils Welfare Board

On October 6, 2021, the Chief Minister of Tamil Nadu declared the creation of the "Non-Resident Tamils Welfare Board." This board is designed to look after the well-being of Tamils living in other countries and states of India. It's a step to help them with their needs and challenges.

## Governing Body

Hon'ble Chief Minister of Tamil Nadu has announced in a press release issued on 06.10.2021, that a “Non-Resident Tamils Welfare Board” will be set up to protect the welfare of Tamils living abroad and in other states of India.

Also, Section 10 (1) of the Non-Resident Tamils Welfare Act, 2011 provides for the formation of a board for the welfare of Tamils living abroad.

On the basis of this, through the Government Order No. 827, Public (R.H-2) Department, dated 24.12.22, a “Non-Resident Tamils Welfare Board” has been set up with 15 Government and Non-Government members.





Thiru M.K. Stalin

Honourable Chief Minister of Tamilnadu



Thiru SM Nasar

Honourable Minister of Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board



Thiru Karthikeya Sivasenapathy

Chairman

Non - Resident Tamils Welfare Board



Thiru Arumugam Parasuraman

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru Muhammed Faisal, London

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru Siddiq Syed Meeran (Dubai Meeran)

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru Caldwell Velnambi, North America

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru G.V.Ram alias Gobalakrishnan Venkataraman, Singapore

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru Pugazh Gandhi, Chennai

Member

Non - Resident Tamils Welfare Board



Thiru A Meeran, Tamil Writers Forum, Andheri West, Mumbai

Member

Non - Resident Tamils Welfare Board



## OFFICIAL MEMBER'S

1) Secretary to Government, Public Department, Chennai - 9
2) Secretary to Government in charge of, Home, Prohibition and Excise Department or a person Nominated by him, Chennai - 9
3) Secretary to Government in charge of, Finance Department or a person Nominated by him, Chennai - 9
4) Secretary to Government in charge of, Labour Welfare and Skills Development Department or a person Nominated by him, Chennai - 9
5) Special Secretary to Government / Joint Secretary to Government / Deputy Secretary to Government, (Officer concerned with NRT subject) Public Department, Chennai - 9
6) The Managing Director, Overseas Manpower Corporation Limited, Guindy, Chennai - 32
7) The Commissioner, Commissionerate of Rehabilitation and Welfare of Non - Resident Tamils, Chennai – 5